Registered as a News Paper in Sri Lanka
பக்கங்கள்: 06
விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01 பிரமோதூத ஹூ வைகாசி மீ 30 ஆம் உ புதன்கிழமை (13 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 19 ஓசை 115

## வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு சர்வஜன வாக்கெடுப்பு 1991 ஜனவரியில்

1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ராஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையின் படி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் இணைந்திருந்து நிர்வகிக்கப்பட வேண்டுமா? அல்லது அவ்விரு மாகாணங்களும் தனித்தனி மாகாணசபைகளையும், ஆளுநர்களையும், பிரதம அமைச்சர்களையும், அமைச்சர்கள் சபையையும் கொண்டிருக்க வேண்டுமா? என்பதை முடிவு செய்வதற்கான சர்வஜன வாக்கெடுப்பை 1991 ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இந்த சர்வஜன வாக்கெடுப்பு இவ் வருடம் ஜுன் மாதம் பத்தாம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

* யுத்த நிறுத்தத்துக்கு ஹமீத்மூலம்இணக்கம்
* முப்படைகளுக்கும் அரசு உஷார்
* சண்டை தொடர்கிறது
* மட்டக்களப்பில் ஹெலிதாக்குதல்
* விமானமும் குண்டு வீச்சு
* பொதுமக்கள்மீது தாக்குதல்

# யுத்தநிறுத்தம் நண்பகலுக்குள் ஏற்படுமா?

# இல்லையேல் சண்டை மேலும் பரவலாம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா பொலிஸ் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட யுத்தம் இன்று நண்பகல் பன்னிரெண்டுமணியுடன் நிறுத்தப்படவேண்டுமென்று நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த நீதிஅமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுநடத்தி இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதேசமயம் முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள், சிப்பாய்கள் ஆகியோரின் விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதுடன் கல்குடா மற்றும் இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் சிலர் சரணடைந்தும் தப்பியோடியுமுள்ளனர். கல்முனையில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே சமயம் இராணுவம் ஷெல் தாக்குதல் மேற்கொண்டிருக்கிறது; விமானப் படை ஹெலிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றன; விமானப்படை விமானங்கள் சில இடங்களில் இலக்குத் தெரியாமல் கண்மூடித் தனமாக குண்டுவீசி தாக்குதல் நடத்துகின்றன.

இந் நிலையில் இன்று நண்பகலுக்குள் போர் நிறுத்தம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹமீத் - புலிகள் பேச்சில் ஏற்பட்ட இணக்கம்

(யாழ்ப்பாணம்)

இன்று பகல் பன்னிரண்டு மணிக்குள் விடுதலைப்புலிகள் தரப்பும் சிறிலங்கா இராணுவ தரப்பும் யுத்தநிறுத்தம் செய்வதென நேற்று நீதி அமைச்சர் ஏ, சி. எஸ் ஹமீதுக்கும் விடுதலை புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கங்காணப்பட்டது.

பொலிசாரின் அத்துமீறல் செயல்களைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக இவ்வுடன்பாடு நேற்று நல்லூரில் நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்டது.

விடுதலைப்புலிகள் தரப்பில்

## அரசுக்குப் புலிகள்

## புலிகள் 16 பேர் வீரமரணம்

விடுதலைப்புலிகள் நேற்று இரவு விடுத்த அறிக்கையில் தமது தரப்பில் 16பேர் வீரமரணமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அவர்களில் பதினொருபேரின் பெயர்கள் வருமாறு: செந்தில், மாசல், சௌந்தரம், கிருஷ்ணா, கீரோ, ரதீபன், தாசீவ், சிவா, கபூர், விமலநாதன், ரங்கரத்தினம். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தங்கள் வீரவணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துள்ளனர்.

## இராணுவம்வெளியேற புலிகள் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்குள் இருந்த இராணுவம் நேற்று வெளியேறிய போது, விடுதலைப் புலிகள் அனுமதி மறுக்கப்பட்டதைத்தொடர்ந்து திரும்பிச்சென்றனர். இதேவேளை ஒரு ஹெலிக்கொப்டர் கோட்டையை நோக்கி பறந்துவந்தும் இறங்க அனுமதி மறுக்கப்பட்

## கல்குடாவில் குண்டுவீச்சு! பொதுமக்கள் பலர் பலி!!

(கோட்டமுனை)

கிழக்கு மாகாணத்தில் கல்குடா, களுவாஞ்சிக்குடி, கிரான், கல்முனை ஆகிய இடங்களில் தொடர்ந்தும் இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஸ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் கல்குடாவில் சன நெருக்கடி மிகுந்த பகுதியில் குண்டு வீசித் தாக்கியதால் பல பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிகின்றது. பலர் காயமடைந்துள்ளனர்.

கல்முனைப் பகுதியில் இலங்கை இராணுவத்தால் பீரங்கித் தாக்குதலும், விமானப்படைக் ஹெலிகப்டர்களால் மோட்டோர் தாக்குதலும் இடம் பெறுகிறது. இதிலும் பொது மக்களுக்கு பலத்த சேதமேற்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன; இம் மோதல்களில் பெருந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அரசாங்க காணிகளில் குடியிருப்பின் சொந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அரசாங்க நிலங்களில் அத்துமீறிக் குடியிருப்பவர்களுக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது.

1983 டிசம்பருக்கு முதல் அரசாங்கக் காணிகளில் குடியிருந்து வருபவர்களுக்குக் காணிகளைச் சொந்தமாக்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் குறைந்த வருமானம் உள்ளவர்களாகவும், வேறு சொந்தக் காணி இல்லாதவர்களாகவும் இவர்கள் இருக்க வேண்டுமாம்.

## பள்ளிக்கூடங்களில் கூட்டுறவுக் கடைகள்

(கொழும்பு) - கல்வி அமைச்சு பணிப்புரை

## வல்வை பொலிஸ்

தில் பொலிஸ் நிலையங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதுடன் கல்குடா மற்றும் இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் சிலர் சரணடைந்தும் தப்பியோடியுமுள்ளனர்.

கல்முனையில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே சமயம் இராணுவம் ஷெல் தாக்குதல் மேற்கொண்டிருக்கிறது; விமானப் படை ஹெலிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றன.

விமானப்படை விமானங்கள் சில இடங்களில் இலக்குத் தெரியாமல் கண்மூடித் தனமாக குண்டுவீசி தாக்குதல் நடத்துகின்றன.

இந் நிலையில் இன்று நண்பகலுக்குள் போர் நிறுத்தம்

(6ஆம் பக்கம் பார்க்க)

சௌந்தரம், கிருஷ்ணா, கிரோ, ரதீபன், தாசீவ், சிவா, கபூர், விமலநாதன், ரங்கரத்தினம். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தங்கள் வீரவணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துள்ளனர்.

கிரான், கல்முனை ஆகிய இடங்களில் தொடர்ந்தும் இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஸ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் கல்குடாவில் சன நெருக்கடி மிகுந்த பகுதியில் குண்டு வீசித் தாக்கியதால் பல பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிகின்றது. பலர் காயமடைந்துள்ளனர்.

விமானப்படைக் ஹெலிகப்டர்களால் மோட்டோர் தாக்குதலும் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன; இம் மோதல்களில் பெருந்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஹமீத் - புலிகள் பேச்சில் ஏற்பட்ட இணக்கம்

(யாழ்ப்பாணம்)

இன்று பகல் பன்னிரண்டு மணிக்குள் விடுதலைப் புலிகள் தரப்பும் சிறிலங்கா இராணுவ தரப்பும் யுத்தநிறுத்தம் செய்வதென நேற்று நீதி அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீதுக்கும் விடுதலை புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கங்காணப்பட்டது.

பொலிசாரின் அத்துமீறல் செயல்களைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக இவ்வுடன்பாடு நேற்று நல்லூரில் நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்டது.

விடுதலைப்புலிகள் தரப்பில் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் சுப்பிர

(6ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம்வெளியேற புலிகள் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்குள் இருந்த இராணுவம் நேற்று வெளியேறிய போது, விடுதலைப் புலிகள் அனுமதி மறுக்கப்பட்டதைத்தொடர்ந்து திரும்பிச்சென்றனர். இதேவேளை ஒரு ஹெலிக்கொப்டர் கோட்டையை நோக்கி பறந்துவந்தும் இறங்க அனுமதி மறுக்கப்பட்டதால் திரும்பிச்சென்றது.

கோட்டை பொலிசாரிற்கு இருப்பில் இருந்த உணவு வகைகள் தீர்ந்துவிட்டதைத் தொடர்ந்து வெளியிலிருந்து பெற்றுக்கொடுப்பதற்கு விடுதலைப்புலிகள் அனுமதித்தும் உள்ளனர். (லோ)

யாழ்ப்பாணத்தில்

## அரசாங்க காணிகளில் குடியிருப்பின் சொந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அரசாங்க நிலங்களில் அத்துமீறிக் குடியிருப்பவர்களுக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது.

1983 டிசம்பருக்கு முதல் அரசாங்கக் காணிகளில் குடியிருந்து வருபவர்களுக்குக் காணிகளைச் சொந்தமாக்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆனால் குறைந்த வருமானம் உள்ளவர்களாகவும், வேறு சொந்தக் காணி இல்லாதவர்களாகவும் இவர்கள் இருக்க வேண்டுமாம்.

## அரசுக்குப் புலிகள் சவால் விட்டுள்ளனர் - அனுரா

(கொழும்பு)

கிழக்குப் பகுதியில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சிபதில் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அரசுக்கு எதிராக விடுதலைப்புலிகள் யுத்தப் பிரகடனம் செய்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

தொடர்ந்து பேசிய அவர்; தாம் விரும்பினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் எந்த ஒரு பகுதியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதையே விடுதலைப்புலிகள் அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.

இந்த நாட்டிலுள்ள ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி

## பல்கலைக்கழகக் காணிவிடயம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது

(கிளிநொச்சி)

- கிருஷ்ணமூர்த்தி

பிரச்சினைக்குரியதாக இருந்த யாழ். பல்கலைக்கழகவிவசாயபீடக் காணிவிடயம் கிளிநொச்சி அரசாங்க அதிபரினாலும், விடுதலைப் புலிகளினாலும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் விவசாயபீட விடுதிக்கென ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர்காணியில் அத்துமீறிக் குடியேறிய 21 குடும்பங்களுக்கும் யாழ். பல்கலைக்கழகத்தினால்நஷ்டஈடாக ஒதுக்கப்பட்ட 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகரினால் பிரித்து வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு குடியிருப்புநிலங்களும் வேறு இடத்தில் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில்விடுதலைப் புலிகள் சார்பில் திரு எம் ஜி. சிவபாதம்கலந்துகொண்டார். யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு க. பரமேஸ்வரன் மேலதிக அரசாங்க அதிபர் காணி அதிகாரி திரு. க. குணராசா மாவட்ட காணி அதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிக்கூடங்களில் கூட்டுறவுக் கடைகள்

(கொழும்பு)

- கல்வி அமைச்சு பணிப்புரை

பள்ளிக்கூடங்களில் வழங்கப்படவிருக்கும் மதியபோசன உணவு முத்திரைத் திட்டத்தை இலகுவில் நடைமுறைப்படுத்தும் வகையில் பள்ளிக்கூடங்கள் தோறும் ஜூலை மாதத்திற்குள் கூட்டுறவுச் சங்கக்கடைகளை ஸ்தாபிக்கும்படி கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்களுக்கான மதிய போசன உணவு முத்திரைத் திட்டம் ஏலவே கம்பஹா மாவட்டப் பள்ளிக்கூடங்களில் செயற்பட்டு வருகிறது.

சமீபத்தில் கல்வி அமைச்சில் நடந்த மாநாடொன்றில் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள் மத்தியில் பேசிய கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி, உணவு முத்திரைத் திட்டம் முழுமையாகச் செயற்படத் தொடங்கியதும் கோதுமை மாவாலான உணவானது மதிய போசனத்திலிருந்து முற்றாக அகற்றப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை பொலிஸ் கோட்டைக்கு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் நேற்று மாலை தமது ஆயுதங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களின் பாதுகாப்பில் யாழ்நகர் வந்து சேர்ந்தனர். இவர்கள் பின்னர் யாழ் கோட்டை முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

## மட்டக்களப்பு மோதல் பற்றி பாராளுமன்றில்ரஞ்சன் அறிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, கல்குடா, வாழைச்சேனை, வெல்லாவெளி பொலிஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தையும் இராணுவ முகாமையும் விடுதலைப்புலிகள் தாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கல்முனை இராணுவ முகாமிலிருந்து ட்ரக் வண்டியில் புறப்பட்ட இராணுவத்தினர் முகாமுக்கு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ வாகனம் பதுங்கி இருந்து தாக்கப்பட்டதில் பலர் கொல்லப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையான குற்றவாளிகள் மீண்டும் களவு

(கொழும்பு)

வெஸாக் பண்டிகை, சுதந்திர தினக் கொண்டாட்டம் ஆகிய தினங்களை முன்னிட்டு மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் மீளவும் தமது 'தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிலரைப் பொலிஸார் மறுபடியும் கைதுசெய்துள்ளனர். இவர்கள் பெரும்பாலும் வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்களிலிருந்து பெறுமதியான பொருட்களைக் கையாடியுள்ளார்கள். நெருக்கடியான வேளைகளில் முடிச்சுமாறிகளும் பஸ்களில் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள் என்று பொலிஸ் அத்தியட்சகர் லயனல் குணத்திலக்கா தெரிவித்தார்.

வெள்ளியன்று புறக்கோட்டைப் பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர், புறக்கோட்டையில் நிறுத்தப்பட்டிருந்த காரிலிருந்து ரூபா 50.000 பெறுமதியான சங்கீத உபகரணத்தைக் களவாடிய மூவரைப் பிடித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மினிவான் - ஓட்டோ மோதல்; நால்வர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரிவீதி, கச்சேரியடியில் நேற்று மினிபஸ்சும் ஆட்டோவும் மோதியதில் நான்குபேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

பயணிகளுடன் வந்த மினி பஸ்சுடன், ஆட்டோ மோதியதில் ஆட்டோ சரிந்து விட்டது. ஆட்டோவை ஓட்டி வந்த சாரதி அதிஷ்ட வசமாக உயிர் பிழைத்தார். மினிபஸ்சில் வந்தபயணிகளில் நான்கு பேர் படுகாயத்திற்குள்ளானார்கள் ஏனையோர் சிறு காயங்களுடன் தப்பினர். காயம் அடைந்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். (ம)

## முப்படைகளும் உஷார் நிலையில்

(கொழும்பு)

கிழக்கிலங்கை மோதல் சம்பவத்தை அடுத்து ஸ்ரீலங்காவின் முப்படைகளும் உஷார் நிலையில் இருக்குமாறும் லீவுகளில் சென்ற சகல படையினரும் உடனடியாக கடமைக்குத் திரும்புமாறும் அரசாங்கம் பணித்துள்ளது,

## மண்டபத்தில் இந்திய கடற்படைப் பிரிவு

(சென்னை)

தமிழ்நாட்டு கரையோர கிராமமான மண்டபப் பகுதியில்இந்தியாவின் கடற்படைப் பிரிவொன்றை நிறுத்திவைப்பதற்கு இந்திய மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

பாக்கு நீரிணைப் பகுதியில் கடத்தல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாகவும் இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டம் இக் கடற்பரப்பில் அதிகரித்திருப்பதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்த தமிழ்நாட்டு அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கடற்படைப் பிரிவு நிறுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கடற்படைப்பிரிவில் கரை

(6ஆம் பக்கம் பார்க்க)

## பவுசர் மோதி ஊழியர் பலி

(யாழ்ப்பாணம்)

நீர் வழங்கல் பகுதி தொழிலாளி ஒருவர் யாழ் மாநகர சபையில் தண்ணீர் பவுசரில் நசுங்குண்டு பலியானார்.

மார்க்கண்டு குணரட்ணம் (34)என்பவர் அண்மையிலேயே திருமணப்பதிவுசெய்துகொண்டவராவார். இவர் நீர்வழங்கும்பவுசர்ஒன்றிற்கு கிளீனராக செயறபட்டிருந்த சமயம் தற்செயலாக நசுங்குண்டு மரணமானார். இவரது சடலம் யாழ்.வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் பதில் நீதிவான் ஏ. ஏ. அன்ரனி விபத்து மரணம் என தீர்ப்பளித்தார். (அ)

# தபால் ரயில் இன்று வராது; மாலையிலும் போகாது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து இன்று காலை யாழ்ப்பாணம் வரவேண்டிய தபால் ரயிலும் மட்டக்களப்புக்கு இன்று காலை போய்ச் சேரவேண்டிய தபால் ரயிலும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நேற்று மாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படவிருந்த தபால் ரயில் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதே சமயம் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட தபால் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு தபால் ரயில் இன்று காலை வந்து சேரமாட்டாதென்பதால் இன்று புதன்கிழமை மாலை கொழும்புக்கு தபால் ரயில் செல்லமாட்டாது.

இதே சமயம் யாழ். நகரிலிருந்து கொழும்புக்கு நேற்று மாலை தனியார் பஸ் வண்டி

(6ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு காய்ச்சல் பரப்பும் நுளம்பை ஒழிக்க உதவுக!

(கொழும்பு)

டெங்கு காய்ச்சல் பரவுவதற்கு காரணமான நுளம்புத் தொல்லையை ஒழிப்பதற்கு சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, உள்ளூராட்சி சபைகள் என்பனவற்றுக்கு பொதுமக்கள் பூரண ஆதரவு தரவேண்டும் என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சல் நோய்

(6ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

புறொயிலர் குஞ்சுகள்

**CHRISTOMBU FARM, THREE ACRE FARM, BAIRAHA FARM** புறோயிலர் குஞ்சுகளை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். **Bairahn Farm** புறோயிலர் குஞ்சுகள் மட்டும் **July 15**வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். **July 15**க்கு பின் தேவையான அளவு **Bairaha Farm** புறோயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (R.343)

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள் சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன் புறம், யாழ்ப்பாணம். (B. 1016)

# பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் அக்கறைதேவை

(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலும் பார்க்க கூடுதலான நேரம் மாணவர்கள் வீட்டிலேயே தங்குவதனால் ஆசிரியர்களிலும் பார்க்க பெற்றோரே பிள்ளைகளின் வளர்ச்சிகளில் பொறுப்புணர்ச்சியுடன் அக்கறை செலுத்த வேண்டும். எத் தொழிலைச் செய்தாலும் கல்வி அறிவுடன் செய்தால் சிறப்பாக அமையும். பிள்ளை செய்யும் தவறுகளைமறைத்து அவர்களைக் கெடுக்காமல் ஆசிரியர்களுடன் கலந்துரையாடித் திருத்த வேண்டும்.

இன்று ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பிள்ளைகளின் கல்வித் தரத்தை அறிந்தீர்கள். நீங்கள் ஒரேயொரு செயலைக் கடைப்பிடித்தால் உங்கள் சிறார்களின் கல்வி மேம்பாட்டையும் பிள்ளைகள் பாடசாலையால் வந்ததும் அவர்களது கொப்பிகளைத் தட்டிப் பார்த்து சரிபிழைகளை அவதானியுங்கள்.

பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தால் மட்டும் போதாது பிள்ளைகளின் கல்வி நல்லொழுக்க வளர்ச்சிகளிலும் ஆசிரியர்களுடன் சேர்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

இவ்வாறு கொக்குவில் கொத்தணி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் தினத்தில் உரையாற்றினார்.

தற்போதைய யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கல்வி மேம்பாட்டுத் திட்டத் திற்கமைய இன்றைய நிகழ்ச்சி நடைபெறுகின்றது, ஆசிரியர்களைப் பெற்றோரும், பெற்றோரை ஆசிரியர்களும் குறை கூறியபடி இருக்காமல் கற்றல், கற்பித்தல் முயற்சிகளிற்கு இக்கருத்தரங்கு பயனளிக்கும் என்று அதிபர் கா. கணேசதாசன் தலைமையுரையில் கூறினார்.

ஆசிரியை திருமதி ச. பத்மநாதன், கவிஞர் திரு. முருகசூரியன், திரு. க. தமிழ்ச்செல்வன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். திரு. கு. மகாலிங்கம் நன்றி கூறினார்.

## அரச அதிபர் தீவுப்பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வார்.

அங்கு அவர் உதவி அரச அதிபர்அலுவலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள், பொதுஸ்தாபனப்பிரதிநிதிகள் கழகங்களின் பிரதிநிதிகள் அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள் போன்ற பல மட்டத்தில் உள்ளவர்களுடனும் அவர்களது பிரச்சினைகள் குறித்து தனித்தனியே கலந்தாலோசிப்பார்.

இப் பகுதியில் நடைமுறைப் படுத்தப்படும் புனரமைப்புத் திட்டங்களை நேரில் அவதானிப்பார். அத்துடன் பொது மக்களின் பிரச்சினைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்வார். இது சம்பந்தமான ஏற்பாடுகளைஉதவி அரச அதிபர் செய்துள்ளார். (மு)

# நெடுந்தீவின்பிரதானபாதை பழுதடைந்துள்ளது

(நெடுந்தீவு)

நெடுந்தீவின் பிரதான வீதி மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது. பாதையின் கரையோரங்களையே மக்கள் தமது போக்குவரத்துக்குப் பயன் படுத்துகின்றனர். இப் பாதையால் பிரயாணம் செய்யும் வாகனங்கள் அடிக்கடி பழுதடைகின்றன.

குன்றும் குழியுமாகக் காணப்படும் பாதை பல வருடங்களாகச் சீர் செய்யப்படாமையால், அப் பாதையில் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள வடபிரதேச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒரேயொரு பஸ்ஸும் அடிக்கடி பழுதடைகிறது வில்லுத்தகடுகள் உடைந்து விடுவதும் சகசமாகி விட்டது.

பாடசாலை செல்லும் மாணவரும், வைத்தியசாலை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தபாலகம் போன்றவற்றுக்குச் செல்லும் மக்களும்பிரதான வீதியின் பாழடைந்த நிலைகண்டு, மேலும் துயருறுகின்றனர்.

இவ் வீதியில் திருத்தவேலைகள் பலவருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதையைச்சீர்செய்யச்செயல் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோருகின்றனர்.

ஏறத்தாழ ஏழுமைல் நீளமான இப்பாதையே நெடுந்தீவின் அனைத்துப் பிரிவுகளையும் ஒன்றிணைக்கும் பிரதான பாதையாகும். (62)

# கிராமசேவை அலுவலகர்ளுக்கு பதவியுயர்வு இல்லை என புகார்

(மட்டக்களப்பு)

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமசேவை அலுவலர்களுக்கு தரம் I பதவியுயர்வு 35 பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மத்திய அரசு வழங்கவில்லைஎன கிழக்கிலங் கிராமசேவை அலுவலகர்சங்க தூதுக்குழு அண்மையில் மாகாண சபை பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதனிடம் நேரடியாக புகார் செய்தது.

மட்டக்களப்பு அரச அதிபர் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த கிராம சேவை அலுவலகர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்ததாவது;

இம்மாவட்டத்தில் தளபாடம் அலுவலகப் பாவனைப்பொருட்கள் என்பன தரப்படவில்லை.

சம்பள அதிகரிப்பு வழங்கப் படல்வேண்டும். சம்பளமுரண்பாடு நீக்கப்படவேண்டும். மேட்டார்சைக்கிள் அலவன்ஸ் கஷ்டப் பிரதேச படி போன்றன வழங்குதல் வேண்டும்.

கிராம அபிவிருத்தி அலுவலகர், கிராமசேவைஅலுவலகர், குடியேற்ற அதிகாரி போன்ற பதவிகளுக்கு எதிர்காலத்தில் வெற்றிடம் ஏற்படுமானால் கிராம சேவை அலுவலகர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படல் வேண்டும்.

இதற்குப் பிரதம செயலாளர் பதிலளிக்கையில்,

தளபாடம், அலுவலகப்பாவனைப் பொருட்கள் பெறவிண்ணப்பங்களை அனுப்பி வைத்தால் வழங்கப்படும்.

ஏனைய விவகாரங்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப் படும்.

கஷ்டப் பிரதேசங்களில் பணி புரியும் கிராம சேவை அலுவலர்களுக்கு பயன் தரக் கூடிய இடமாற்ற திட்டம் அமுல்செய்யப்படும்.

சங்கச் செயலாளர் திரு. ஏ. ஜே. மங்களராஜா, திரு எஸ் தங்கவேல், திரு. ஏ பாரதிதாசன் ஆகியோர் இச்சந்திப்பில் இடம்பெற்றனர்.

# சூழ்நிலைகளினால் திறமைகள் வெளிப்படுத்தப்படவில்லை

- கணேசநாதன்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் நிலவிய கடந்தகால சூழ்நிலைகளினால் கலை விழிப்புணர்ச்சியுள்ளவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தமுடியாத நிலையில் இருந்தனர்.

மேற்கண்டவாறு வட-கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் திரு. எஸ்.கணேசநாதன் மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையினால் ஏற்பாடு செய்யப் பட்ட கிராமிய கலைவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

நகரமண்டபத்தில் தலைமைப் பீட உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில்;

இன்றைய சூழ்நிலையில் நாம் கடந்த காலங்களில் இழந்திருந்த சுதந்திரத்தை ஓரளவு பெற்றுள்ளவர்களாக உள்ளோம். இதனைப் பயன் படுத்தி வட-கிழக்கு மாகாண கலை, கலாசார பரிவர்த்தனை தேவையென நான் விரும்புகின்றேன்.

பொருளாதார, ஆத்மீக ரீதியில் முன்னேறினால் மட்டும் போதாது. கலை, கலாசார ரீதியாகவும் முன்னேற வேண்டும்.

எமக்கென தனியான கலை உண்டு. கலாசார பாரம்பரியம் உண்டு. இது எமது முன்னோர்களின் பொக்கிஷம். இதனை அழியவிடாமல் வளர்க்கவேண்டும் என்றார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு செயலாளர் திரு. சரித்தரத்வத்த, அரசஅதிபர் திரு. ஆர். யோகநாதன் ஆகியோரும் பேசினர். (37)

# சிறுபோகவேளாண்மையில் நோய்தாக்கம்ஏற்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

சிறுபோக வேளாண்மையில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

எலிகளால் ஏற்பட்ட தாக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டு வரும் இவ்வேளையில் புதிய நோய்களால் தாக்கம் ஏற்பட்டுவருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். என இரணைமடுத்திட்ட ஊரியான் உபகு[illegible]த்தலைவர்

அறிவுரைகளை கூறவோ. அடிக்கடி வந்து பயிர்களைப் பார்வையிடவோ உத்தியோகத்தர்கள் இல்லாததால் விவசாயிகள் தமக்கு தெரிந்த மட்டில் தமக்குத் தெரிந்த மருந்துகளை அடித்து வருகின்றனர். இதனால் பூச்சித் தாக்கமும், பூச்சிப் பெருக்கமும் கூடிக்கொண்டு வருகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இலா[illegible]

# கருத்தரங்கிற்கு சில அதிகாரிகள் வரவில்லை

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி ழக்கின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலில், வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், தபால் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிளோ, பிரதிநிதிகளோ கலந்து கொள்ளாமை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டன.

வடமராட்சிகிழக்கில் வீதி, கல்வி, சுகாதாரம் தொலைத் தொடர்பு ஆகிய துறைகளில் அடிப்படை வசதிகளைக் கூட பெறாத நிலையில் அப்பகுதி மக்கள் உள்ளார்கள்.

எனவே, இது சம்பந்தமாக நடத்தப்பட்ட கலந்துரையாடலில் சகல திணைக்களங்களுக்கும் அழைப்பு விடுக்கப் பட்ட போதிலும் இவ் அதிகாரிகள் கலந்துகொள்ளாமை குறித்து பொது ஸ்தாபனங்கள் அதிருப்தி தெரிவித்தன.

இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பிரதிநிதிகளும் ஈழவர் ஜனநாயக முன்னணி பிரதிநிதிகளும்கலந்து கொண்டார்கள். (36)

## இன்று திருநாள்

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் இன்று நடைபெறுகிறது. கடந்த காலங்களில் வடமராட்சியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்

# கொள்ளையடிக்கப்பட்ட வண்டிகள் பிடிக்கப்பட்டன

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
STUART STEEN PEDRO HUGHES BENARD GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-45, 9-45
ரஜனி, அம்பிகா, ஜெயசங்கர் சுஜாதா, நாகேஸ் நடித்த
**மாவீரன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90

நாதன் மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய கலைவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

நகரமண்டபத்தில் தலைமைப் பீட உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. அவர் மேலும் பேசுகையில்;

இன்றைய சூழ்நிலையில் நாம் கடந்த காலங்களில் இழந்திருந்த சுதந்திரத்தை ஓரளவு பெற்றுள்ளவர்களாக உள்ளோம். இதனைப் பயன்படுத்தி வட-கிழக்கு மாகாண கலை, கலாசார பரிவர்த்தனை தேவையென நான் விரும்புகின்றேன்.

## பாஷையூர் அந்தோனியார் திருநாள்

(யாழ்ப்பாணம்)

பிரசித்திபெற்ற பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் இன்று நடைபெறுகிறதுகாலையாம். ஆயர் அதி. வண. தியோகுப் பிள்ளை ஆண்டகை தலைமையில் திருநாள் பூசை நடைபெறும்.

மாலையில் புனித அந்தோனியாரின் திருச் சொரூப தேர்ப்பவனியும்நடை பெறும்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு செயலாளர் திரு. சரித்தரத்வத்த, அரசஅதிபர் திரு. ஆர். யோகநாதன் ஆகியோரும் பேசினர். (37)

மக்களின் பிரச்சினைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்வார். இது சம்பந்தமான ஏற்பாடுகளைஉதவி அரச அதிபர் செய்துள்ளார். (மு)

# சிறுபோகவேளாண்மையில் நோய்தாக்கம்ஏற்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

சிறுபோக வேளாண்மையில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

எலிகளால் ஏற்பட்ட தாக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டு வரும் இவ்வேளையில் புதிய நோய்களால் தாக்கம் ஏற்பட்டுவருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். என இரணை மடுத்திட்ட ஊரியான் உபகுழுத்தலைவர் திரு. மு.கந்தசாமி தெரிவித்தார்.

மற்ஸ என அழைக்கப்படும் சிற்றுண்ணி, கபிலதத்தி பூச்சிகளாலேயே நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. எவ்வளவு பசளைகளைப் போட்டாலும் பயிர்கள் செழிப்படையாது மஞ்சல் நிறமாகவும் வளர்ச்சி குன்றியும் காணப்படுகிறது.

இதற்கு முன் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள் அடிக்கடி வயல்களை அவதானித்து நோய்கள் பரவாது இருப்பதற்கான ஆலோசனைகளைக் கூறிவந்தனர்.

தற்போது அவர்கள் எல்லோரும் கிராமசேவையாளர்களாக மாற்றப்பட்டு விட்டதால் விவசாயம் சம்பந்தமான அறிவுரைகளை கூறவோ. அடிக்கடி வந்து பயிர்களைப் பார்வையிடவோ உத்தியோகத்தர்கள் இல்லாததால் விவசாயிகள் தமக்கு தெரிந்த மட்டில் தமக்குத் தெரிந்த மருந்துகளை அடித்து வருகின்றனர். இதனால் பூச்சித் தாக்கமும், பூச்சிப் பெருக்கமும் கூடிக்கொண்டு வருகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இலாகா வினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென திரு மு கந்தசாமி தெரிவித்தார். (49

வித்ததாவது;

இம்மாவட்டத்தில் தளபாடம் அலுவலகப் பாவனைப்பொருட்கள் என்பன தரப்படவில்லை.

சம்பள அதிகரிப்பு வழங்கப்படல்வேண்டும். சம்பளமுரண்பாடு நீக்கப்படவேண்டும். மேட்டார்சைக்கிள் அலவன்ஸ் கஷ்டப் பிரதேச படி போன்றன வழங்குதல் வேண்டும்.

கிராம அபிவிருத்தி அலுவலகர், கிராமசேவைஅலுவலகர், குடியேற்ற அதிகாரி போன்ற பதவிகளுக்கு எதிர்காலத்தில் வெற்றிடம் ஏற்படுமானால் கிராம சேவை அலுவலகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

வடமராட்சி ழக்கின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலில்,வீதிஅபிவிருத்தி அதிகாரசபை, கல்வித்திணைக்களம், சுகாதாரத் திணைக்களம்,தபால் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிளோ, பிரதிநிதிகளோ கலந்துகொள்ளாமை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டன.

வடமராட்சிகிழக்கில் வீதி, கல்வி,சுகாதாரம் தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் அடிப்படை வசதிகளைக் கூட பெறாத நிலையில் அப்பகுதி மக்கள் உள்ளார்கள்.

எனவே, இது சம்பந்தமாக நடத்தப்பட்ட கலந்துரையாடலில் சகல திணைக்களங்கள் பட்ட போதிலும் இவ் அதிகாரிகள் கலந்துகொள்ளாமை குறித்து பொது ஸ்தாபனங்கள் அதிருப்தி தெரிவித்தன.

இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பிரதிநிதிகளும் ஈழவர் ஜனநாயக முன்னணி பிரதிநிதிகளும்கலந்து கொண்டார்கள். (36)

# கொள்ளையடிக்கப்பட்ட வண்டிகள் பிடிக்கப்பட்டன

(பொத்துவில்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் அதிகாரி ஜனாப். ஏ. ஏ. பாவாவிடமிருந்து பயங்கரக் கொள்ளையர்களினால் பொத்துவில் காட்டுப் பகுதியில் வைத்து கொள்ளையடிக்கப்பட்ட பிக்கப் ஜீப் வண்டி. வஹஒகலை இராணுவத்தினரால் காட்டினுள் கைவிடப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை திட்டமிடல் அதிகாரி அம்பாறையிலிருந்து சியம்பலாந்துவை வழியாக, பொத்துவில் நோக்கிச் செல்லும் போது பொத்துவில் மொனறாகலை வீதியில் 6ஆம் கட்டை காட்டுப்பகுதியில் வைத்து பி. ப. 3 மணியளவில் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திட்டமிடல் அதிகாரியின் அரசாங்க ஜீப் வண்டியைக் கொள்ளையடித்தவர்கள் அவ்வண்டியுடன், காரியாலய கடமை ஆவணங்களையும் எடுத்துச் சென்றதுடன்,திட்டமிடல் அதிகாரிகளையும், சாரதியையும் கோரமாய்த் தாக்கியபின் காட்டினுள் கட்டிவைத்துள்ளனர்.

இவர்கள் தங்களின் கட்டினை அவிழ்த்தபின் தப்பித்து வந்து விவசாயிகளிடம் தஞ்சமடைந்தபின் பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. ரி. சச்சிதானந்தனுக்கு தகவல் தெரிவித்து, உதவி அரசாங்க அதிபரின் உதவியுடன் பொத்துவிலை யடைந்துள்ளனர். அதேதினம் போக்குவரத்துச் சபையின் வண்டியொன்றும் வழிமறிக்கப்பட்டுள்ளது. (54)

# காணி உறுதிகள் தேங்கிய நிலையில் உள்ளன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் பதிவிற்காக ஒப்படைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான உறுதிகள் இதுவரை விநியோகம் செய்யப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன.

கடந்தகால வன்செயல்கள் காரணமாக அலுவல்கள் சீராக இயங்காத நிலையில் தான் உறுதிப்பதிவுகள் தாமதமாகின.

புனர்வாழ்வு புனரமைப்பு ஒன்றிணைந்த நிவாரண திட்டத்தின்கீழ் வீடுகள், கட்டிடங்களை புனரமைத்தல் வங்கிகள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் வழங்கப்படும் கடனுதவிகள் பெறுதல் ஆகியவற்றிற்கு காணி உறுதி முக்கியமானதாகும்.

ஆனால் காணிபதிவகத்தில் உறுதிகளின் தேக்கநிலை காரணமாக உறுதியின்றி நிவாரணம் பெறமுடியாத நிலையில் பொதுமக்கள் திண்டாடுகிறார்கள்.

பதிவுசெய்யப்பட்ட பல உறுதிகள் கைெ ாப்பமின்றி தேங்கிக்கிடக்கின்றன. இதற்கு காரணம் கையொப்பமிட ஒரு உத்தியோகத்தர் மட்டும்தான் இருப்பதாகும்.

இந் நிலையில் சகல உறுதிகளும் கையொப்பமிட்டு வழமையான நிலைக்கு அலுவல்கள் திரும்பும்வரை ஓரே விசேட ஏற்பாட்டின்கீழ் மேலதிகமாக கையொப்பமிடும் உத்தியோகத்தரொருவர் நியமனம் பெறல்வேண்டும். (37)

## நகரசபை பொறுப்பேற்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை நிர்வாகத்தின் எல்லைப் பகுதிகளுக்குள் இருக்கும் ஐந்து பொது மயானங்கள், மேற்படி நகரசபையினால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது.

இதுகாலவரை ஸ்தாபனரீதியாக நகரசபையினால் பொறுப் பேற்கப் படாமல் இருந்த இந்த மயானங்கள், வவுனியா அரசாங்க அதிபருக்கும்நகரசபை அதிகாரிகளுக்குமிடையே இடம் பெற்ற கலந்துரையாடலில் பின்னர் அண்மையில் மேற்படி பொது மயானங்கள் நகரசபையினால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது. (தி)

## கல் தட்டுப்பாடு நீங்கிவிடும்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். மாவட்டத்தில் வீதிகளைப் புனரமைப்பதற்கு கல்லுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கிவிடும்.

யாழ். மாவட்டத்தில் முக்கிய வீதிகளை அமைப்பதற்குத் தேவையான கற்களை காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையிலிருந்து பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்தில் திருத்தியமைக்கப்படாமல் இருந்த முக்கிய வீதிகளின் வேலைகள் ஓரிரு மாதங்களில் முடிவடைந்துவிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (36)

## மதிய போசன விருந்து

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மாணவர்மன்றத்தின் வருடாந்த மதியபோசனவிருந்து நாளைவியாழக்கிழமை மன்றத் தலைவி செல்வி. கே. இராஜேஸ்வரி தலைமையில்நடைபெறும்(15)

## இன்று திருநாள்

(கரவெட்டி)

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் இன்று நடைபெறுகிறது. கடந்த காலங்களில் வடமராட்சியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இவ்வாலய திருநாள் இம்முறை சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது!

## மரம் நடுகைக்கென ஐந்து லட்சம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். மாவட்டத்தில் இவ் வருடம் மரம் நடுகை இயக்கத்திற்காக ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்தே இதற்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து பெரும் பகுதி வடமராட்சி கிழக்கில் உள்ள அரசாங்கக் காணிகளில் மரம் நடுகைக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கில் ஏற்கனவே மணல்காடு, மாமுனை ஆகிய இடங்களில் இத்திட்டத்தின் கீழ் சவுக்கு, பனை ஆகிய மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. (36)

## மெய்வல்லுநர் போட்டி

(ஏழாலை)

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய வருடாந்தஇல்ல மெய்வல்லுநர் போட்டிநாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய அதிபர் வீ. த. திருநாவுக்கரசு தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

திருமதி அ. துரைசிங்கம், கல்வி அதிகாரி பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார். தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் அமைப்பாளர் ராஜன், சு. இரத்தினராசா, கல்வி அதிகாரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக்கலந்து கொள்வர்கள்.

## பாலம் உடைந்துள்ளது

(அராலி)

அராலி வழுக்கையாறு பாலத்தருகே எழுநூற்றி எண்பத்தொன்பதாம் வழி இலக்க பேருந்துப் பாதையில் சிறிய பாலம் ஒன்றின் நடுப் பகுதிகள் நீண்டகாலமாக இடிந்து விழுந்த நிலையில் உள்ளது.

இதனால் இப்பாதையில் செல்லும் வாகனதாரிகள், பாதசாரிகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றனர்.

வாகன சாரதிகள் வாகனங்களை அவதானத்துடன் நெளித்து வளைத்துச் செலுத்துவதன் மூலமே இவ்வீதியால் செல்லமுடிகிறது. (20)


உ

யா/வைத்தீஸ்வர வித்தியாலய பவள விழா

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு : சீட்டு இல. 14610
இரண்டாம் பரிசு : சீட்டு இல. 02314
மூன்றாம் பரிசு : சீட்டு இல. 14288

ஆறுதற் பரிசுகள்

233, 571, 739, 1356, 1449, 1878, 2082, 2269, 2896, 2998, 3516, 3520, 3698, 4461, 4904, 5437, 5652, 6424, 7190, 7759, 8181, 8196, 8318, 8415, 8431, 8461, 8521, 8730, 8958, 9001, 9082, ,343, 9519, 9972, 10247, 10695, 10787, 10944, ‡1084, 11861, 11932, 12502, 12578, 12684, 12813, ‡3593, 14725, 15052, 16506, 16639

மாணவருக்குரிய ஆறுதற் பரிசுகள்

23, 44, 113, 216, 329, 359, 360, 514, 668, 788

பரிசுக்குரியவர்கள் 18. 06. 90 திங்கட்கிழமை பி.ப. 2. 30 – 4. 00 மணிக்கிடையில், தமது ஆளடையாளத்தை நிரூபித்து, கல்லூரி அலுவலகத்தில் பரிசுப் பொருட்களைப் பெறலாம்.

யா/வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

பழைய மாணவர் சங்கம்

(B/1161)



(கலர்)

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2–30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன ரோஜா
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில் 10.30, 2.30, 6.30, 9.30
M.G.R, ஜெயலலிதா, அசோகன்,சுந்தாராஜன், பண்டரிபாய், சோ
நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக்
நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

# தீவிரவாதியினரும் படையினரும் காஷ்மீர்ப்பகுதியில் மோதல்

## இரு ஜவான்களைக் காணவில்லை

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பகுதியிலும் ஸ்ரீநகரிலும் தீவிரவாதிசளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் மோதல்சள் நடைபெற்றுள்ளன. படையினர் வீதியில் ரோந்து சென்ற போதும் தேடுதல் நடத்திய போதும் இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் நான்கு ஜவான்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இவற்றுக்கு இரு தீவிரவாத அமைப்புக்கள் உரிமை கோரியுள்ளன.

ஸ்ரீநகரிலும் அதன் சில பகுதிகளிலும் வெடிச்சத்தங்கள், குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மற்றொரு இடத்தில் இரு ஜவான்கள் காணமல்போனதாகவும் இவர்களை காஷ்மீர் தீவிரவாதிகளே கடத்திச் சென்றுள்ளதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காஷ்மீர் பாகிஸ்தான் எல்லைப் புறம் வாழும் பகுதி மக்கள் இந்திய இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் குறித்து புகார்கள் தெரிவித்துள்ளனர்

ஒரு பெண் மீது படையினர் பலாத்காரம் புரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரணைகளும் நடைபெறுகின்றன

புதிய ஆளுநர் காஷ்மீர் பகுதிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் பெரும் பாதிப்பு

(வாஷிங்டன்)

மூன்றாம் உலக நாடுகளில் ஆண்களைவிடப்பெண்களுக்கு குறைவாகவே ஊதியம் வழங்கப்படுகிறது என ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிதியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெண்களுக்கு இங்கு ஆண்களை விடக் கஷ்டங்களும், அடக்கு முறைகளும் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள் ஆண்களைவிட இருபத்தைந்து சத வீத நேரம் அதிகமாக உழைக்கின்றபோதிலும் குறைந்த ஊதியமே கிடைக்கிறது.

கோமாலி, பூட்டான், கானா, கொங்கோக் போன்ற நாடுகளில் கர்ப்பம்அடைந்தது முதல் குழந்தை பெறும் வரை ஒருஇலட்சம் பெண்களில் ஆயிரம் பேர் வரை இறந்து விடுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவ, சோவியத் - அமெரிக்க கூட்டு நிறுவனம்

(வாஷிங்டன்)

''வாஷிங்டன் உச்சி மாநாட்டின் விளைவாக உலகிலுள்ள நெருக்கடிநிலை குறையும்'' பிரபல அமெரிக்க தொழிலதிபரான ஆர்மவிட் ஹேமர் கூறினார்.

ஒரு புதிய சோவியத் அமெரிக்க லாப நோக்கற்ற கூட்டு நிறுவனம் அமைக்கப்படுவதைப் பற்றி இப் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

சுற்றுப்புற சூழ்நிலைப் பாதுகாப்பு, விவசாயம், மருத்துவம் ஆகிய துறைகளில் மூன்றாம் உலக நாடுகளுக்கு தாமே முன்வந்து உதவி செய்ய இரு நாடுகளும் தங்கள் முயற்சிகளை ஒன்றிணைத்து செயல்படுவது, இதுவே முதல் தடவை எனக் கூறலாம்.

இந்த வாலண்டரி கூட்டமைப்பைச் சேர்ந்த அமெரிக்க, சோவியத் மருத்துவர்கள், நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மெக்சிக்கோ நாட்டிலுள்ள லெர்மாப் பகுதிக்கு இந்தக் கோடை காலத்தில் செல்ல உள்ளனர். பங்களாதேஷ், இந்தியா, மொஸாம்பிக், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு இவ்விரு நாடுகளின் நிபுணர்கள் செல்ல உள்ளனர்.

சோவியத் அமெரிக்க உறவுகளில் இது ஒரு புதிய அத்தியாயம் என்று ஹேமர் கூறினார். மேலும் இந்த அமைப்பிற்கு 25,000 டாலர் நிதி உதவி அளித்துள்ளார். அமெரிக்காவிலுள்ள தனியார் நிறுவனங்களும், சோவியத் சமாதானக் கமிட்டியும், சோவியத் அறிவியல் பேரவையும், அமெரிக்கா மற்றும் கனடா பற்றிய சோவியத் உயர்கல்வி அமைப்புகளும் இந்த கூட்டு நிறுவனப் பணிகளில் பங்கு கொண்டுள்ளன.

## பிரிட்டன் - ஈரான் உறவு சீராக பிரிட்டிஷ் எம். பிக்கள் முயற்சி

### · சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல்

(லண்டன்)

பிரிட்டனுக்குப் ஈரானுக்கும் இடையிலான ராஜீக உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கு நான்கு பிரிட்டிஷ் எம். பிக்கள் விரைவில் ஈரான் செல்லவிருப்பதாக லண்டனில் வெளியாகும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்துள்ளது

ரிட்டனில் வாழும் சல்மான் ருஷ்தி முஸ்லிம்களைப் புண்படுத்தும் வகையில் எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' என்ற நூல் தொடர்பாக இரு நாடுசளுக்கும் இடையிலான உறவுகள் கடந்த மார்ச் மாதம் முதல் பாதிக்கப்பட்டிருந்தன.

ஈரான் ஆதரவான தீவிரவாதிகளால் லெபனானில் பயணக் கைதிகளாக்கப்பட்ட மூன்று பிரிட்டிஷ் காரரையும் ஒரு ஐரிஸ் காரரையும் விடுவிக்கவும் இந்த எம்பிக்களின் விஜயம் உதவும் எனவும் சண்டே ரைய்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நான்கு எம்பிக்களும் 1988இல் பயணக்கைதி விடுதலை தொடர்பாகஈரானுச்கு சென்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மூன்றாம் உலக இராணுவ செலவினம்; ஐ. நா. வெளியிடும் திடுக்கிடும் தகவல்கள்

(லண்டன்)

இன்று வளர்முக நாடுகள் ஆயுதங்களுக்காக அவற்றின் சராசரி குரோசு தேசிய உற்பத்தியில் 5. 5 சதவிகிதத்தை செலவிடுகின்றன.

இத்தகவலை வெளியிட்டுள்ள ஐ. நா. சபை, சுகாதாரத்துறைக்கு 1 சதவிகிதத்தையும், கல்வித் துறைக்கு 3 சதவிகிதத்தையும் செலவிடுவதாகவும் அறிவிக்கிறது.

வளர்முக நாடுகளில் 110 லட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். இது உலக மொத்தத் தொகையில் 50 சதவீதமாகும் அவர்களின் பராமரிப்புக்கு 10000 - 120000 கோடி டாலர்கள் செலவாகிறது. பிரதி 240 நபர்களுக்கு ஒரு இராணுவ வீரர் உண்டு: ஆனால் பிரதி 1950 நபர்களுக்கு ஒரே ஒரு வைத்தியர் உண்டு.

மூன்றாம் உலக நாடுகள் பயங்கரமான வேகத்தில் இராணுவமயமாக்கப்பட்டு வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன சில நாடுகள் தமது சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் பாதுகாப்பதற்காக இராணுவத்தை அதிகரிக்கின்றன. சிலவற்றில் பிராந்திய மோதல்கள்காரணமாக இருந்தன.

இராணுவமயமாக்கல் காரணமாக நாடுகளில் பொருளாதார மற்றும் வளர்ச்சிகள் குன்றியுள்ளன.

மேலும் மூன்றாம் உலக நாடுகள் ஏவுகணைகளைப் பெறும் அபாயம் உருவாகிவருகிறது. லண்டன் சர்வதேச இராணுவக் கேந்திர ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் ஏறத்தாழ 23 வளர்முக நாடுகள் ஏதோ ஒரு வகையான ஏவுகணைகளை வைத்துள்ளன. மேலும் இவற்றில் சில இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. சில அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இப்போக்கை மாற்ற வேண்டும் என்று சில மூன்றாம் உலகத் தலைவர்கள் முயல்கின்றனர் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா ஏப்ரல் 1985இல் கிங்ஸ்டனில் (பிரிட்டன்) நடைபெற்ற ஐ. நா. மனித குடியிருப்பு கமிஷனின் 18ஆவது கூட்டத் தொடரில் பேசுகையில் ஆயுதஇராணுவத் தேவைகளுக்காக செலவிடும் தொகையில்ஒருசதவிகிதத்தை குடியிருப்புக்களை நிர்மாணிப்பதற்காக ஒதுக்க வேண்டுமென்று கோரினார்.

இப்போக்கு சற்று தலை தூக்குவதாகக் கூறப்படுகிறது.

## .பி.பி.ஸி நிருபர் கைது விடயம் உயர் நீதிமன்றம் சென்றது

(புதுடில்லி)

கடந்தவாரம் காஷ்மீரில் பி. பி ஸி, நிருபர் ஜமீல் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட விடயம் உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

இவரை அழைத்துச் சென்ற இராணுவ அதிகாரிகள் குறிதத விபரங்சளை தெரிவிக்குமாறு உயர்நீதிமன்றம் பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிருபரை அழைத்துச் செல்லவில்லை என்றும் தீவிரவாதிகளே இராணுவ உடையில் அழைத்துச் சென்று இராணுவத்துக்கு எதிராக பிரசாரம் செய்ததாக முன்னர் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மண்டேலா அமெரிக்கா விஜயம்

(வாஷிங்டன்)

தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகள் விதித்ததை தாம் மறுபரிசீலனை செய்யப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார் என வெள்ளை மாளிகை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இதே வேளை தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்குமாறு கோரி உலக நாடுகள் பலவற்றுக்கு தற்போது விஜயம் செய்து வரும் ஆபிரிக்க தேசியகாங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா இம்மாதம் 20ஆம்திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

## ஜனாதிபதி ஆலோசகருக்கு ஆறுமாதசிறைத் தண்டனை

(வாஷிங்டன்)

ஈரானுக்கு இரகசியமாக ஆயுத விற்பனை செய்த குற்றச்சாட்டின் மீது அமெரிக்க ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் ஜோண் வொயின் டெச்ஸ்ரருச்கு ஆறு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானுக்கு இரசசியமாக ஆயுத வ்ற்பனை செய்துஅதன் லாபத்தை நிக்கரகுவா கொன்றா கிளர்ச்சிக்காரருக்கு வழங்கிய விடயத்தை இவர் மூடி மறைக்க முயற்சித்ததாக குற்றம் சட்டப் பட்டார்.

வேறு அதிகாரிகள் மீதும் இது தொடர்பான விசாரனைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

## சோவியத் வத்திக்கான் உறவு

(வத்திக்கான்)

சோவிய ரஷ்யாவுக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான உறவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோவியத் யூனியனின் முதலாவது வத்திக்கான் தூதுவராக யூரி கர்லோங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமது நியமனத்தை பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரிடம் ஒப்படைத்தார்.

# களைகட்டுகிறது இத்தாலியா '90

இத்தாலியில் உலக உதைப் பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பித்து ஆறு நாட்களாகிவிட்டன. பன்னிரண்டு ஆட்டங்கள் முடிவடைந்து விட்டன. பன்னிரண்டு நகரங்களில் பன்னிரண்டு அரங்குகளில் ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது கிண்ணப் போட்டியின்போது ஏற்பட்ட ரசிகர் வன்முறையால் அநியாயமாக 39 பேர் மரணமடைந்தது எல்லோருக்கும் திகிலை ஊட்டியிருக்கிறது. குறிப்பாக இங்கிலாந்து ரசிகர்கள் இவ்வகை வன்முறைகளில் ஈடுபடுவதில் முதன்மையானவர்களாகத் தென்படுகிறார்கள். இதனால் [illegible] றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடுக்கும் நோக்கமாக 3இங்கிலாந்து ரசிகர்கள் 20 நாள் சிறைவாசம் பெற்றுள்ளார்கள். இவர்கள் சிறையில் இருந்து தொலைக் காட்சியில் ஆட்டங்களைப் பார்த்து ரசித்துக் கொள்ளலாம். இன்னொரு வன்முறைக் [illegible] லாம். இதனால் மத்தியஸ்தர்சள் தம் கடமையைச் சரிவரச் செய்ய இயலாமல் போவதும் உண்டு. இம்முறை ஏற்பாட்டாளர்களால் மத்தியஸ்தர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது பிழைவிடும் வீரர்களுக்கு எதிராக மிகக் கடுமையான [illegible]

இது இரண்டாவது அதிர்ச்சி. றோமானியாவின் இரண்டாவது கோல் பெனால்டி மூலம் போடப்பட்டதாகும். இதில் சிறிது சர்ச்சைகள் இருந்த போதும் ரஷ்யா அணி எவ்வித மறுப்பும் இன்றி உன்னத பாணியில் முடிவை ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது இன்னொருஎதிர்பாராத முடிவாக பலம் குறைந்த கோஸ்டாரிக்கா அணி ஐரோப்பிய அணியான ஸ்கொ [illegible]

## சிந்துமாகாண கலவரத்தை ஐ.நா.பார்வையிட வேண்டும்

(கராச்சி)

பாகிஸ்தானில் சிந்து மாகா [illegible] தப் பட வேண்டும். எனபாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட் [illegible]

கப்பட்டது.

சுற்றுப்புற சூழ்நிலைப் பாதுகாப்பு, விவசாயம், மருத்துவம் ஆகிய துறைகளில் மூன்றாம் உலக நாடுகளுக்கு

இந்தக் கோடை காலத்தில் செல்ல உள்ளனர். பங்களாதேஷ், இந்தியா, மொஸாம்பிக், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு இவ்விரு நாடு

யும், அமெரிக்கா மற்றும் கனடா பற்றிய சோவியத் உயர்கல்வி அமைப்புகளும் இந்த கூட்டு நிறுவனப் பணிகளில் பங்கு கொண்டுள்ளன.

விஜயம் உதவும் எனவும் சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நான்கு எம்பிக்களும் 1988இல் பயணக்கைதி விடு

# களைகட்டுகிறது இத்தாலியா '90

இத்தாலியில் உலக உதைப் பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பித்து ஆறு நாட்களாகிவிட்டன. பன்னிரண்டு ஆட்டங்கள் முடிவடைந்து விட்டன. பன்னிரண்டு நகரங்களில் பன்னிரண்டு அரங்குகளில் ஆட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரையில் தடையின்றிச் சீராகப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தும் இம்மாபெரும் விழாவை வெற்றிகரமாக நடாத்த இத்தாலி மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியன.

### பிரமாண்டமான ஏற்பாடுகள்

அரங்குகளைக் காலநேரத்தில் செய்து முடிப்பதற்காக இறுதி நிமிடம்வரை இரவு பகலாக வேலைகள் நடைபெற்றன. புதிதாக அமைத்தல், திருத்துதல், நவீனமயப்படுத்தல் என்று பலகோடி டொலர் செலவில் வேலைகள் நடைபெற்றன. துரதிர்ஷ்டவசமாக இச்செயற்பாடுகளின் போது அரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் 5 பேர் கொல்லப்பட்டும் விட்டார்கள்.

இது மட்டுமன்றி புதிய பாதைகள் அமைத்தல், இத்தாலிக்கு வரப்போகும் லட்சக்கணக்கான ரசிகர்களுக்கு இருப்பிட வசதிகள், போக்குவரத்து வசதிகள், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல் என இத்தாலியின் சுமைகள் அதிகரித்துக்கொண்டே சென்றன. இவற்றையெல்லாம் மிகவும் திறமையாக நிறைவேற்றி இன்று ''இத்தாலியா 90'' வெற்றிகரமாக நடைபெற வழிவகுத்துள்ளார்கள் சம்பந்தப்பட்டவர்கள்.

### ரசிகர்களின் வன்முறை

உலகக்கிண்ண உதைபந்தாட்ட ஏற்பாட்டாளர்களும் இத்தாலிய அரசாங்கமும் எதிர்நோக்கும் முக்கியமானதொரு பிரச்சினை. வன்முறை ரசிகர்களின் குழப்பங்களாகும். அண்மைக் காலங்களில் ஐரோப்பிய உதைபந்தாட்டக் களத்தில் வன்முறைகள் அதிகரித்தே வந்துள்ளன. அதன் உச்சக்கட்டமாக இறுதி ஆட்டங்களின் போது வன்முறைகள் வெடிக்குமோ என்று அனைவரும் கவலைப்படுகிறார்கள். 1985இல் பிரேஸில், ஐரோப்பியச் சுற்றுக் கிண்ணப் போட்டியின்போது ஏற்பட்ட ரசிகர் வன்முறையால் அநியாயமாக 39 பேர் மரணமடைந்தது எல்லோருக்கும் திகிலை ஊட்டியிருக்கிறது. குறிப்பாக இங்கிலாந்து ரசிகர்கள் இவ்வகை வன்முறைகளில் ஈடுபடுவதில் முதன்மையானவர்களாகத் தென்படுகிறார்கள். இதனால் தான் இங்கிலாந்தும் ஒல்லாந்தும் இடம்பெற்றுள்ள பிரிவு ஆட்டங்கள் சார்ட்டினியாத் தீவில் நடைபெறவுள்ளன. அங்கு செல்லும் ரசிகர்களை



அவதானித்துக்கொள்ள இலகுவாக இருக்கும் என்பது இதற்குக் காரணமாகும். குறிப்பாக இங்கிலாந்து ஒல்லாந்து ரசிகர்கள் பரமவைரிகள் ஆவர். இந்நிலையில் இரு அணிகளும் ஒரே பிரிவில் வந்துவிட்டமை இன்னுமொரு தலையிடியாகும். சார்ட்டினியாவில் 3000 பொலிஸார் 10000 ஆங்கில ரசிகர்களையும் 7000 ஒல்லாந்து ரசிகர்களையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதைவிடப் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஏதும் நடந்துவிடக் கூடாதே என்பதிலும் எல்லோரும் மிக அக்கறையாக இருக்கிறார்கள். 1972 மியூனிக் ஒலிம்பிக் போட்டிகளின் போது 11 இஸ்ரேலியர் சுட்டுக்கொல்லப்பட்டதை ஏற்பாட்டாளர்கள் மறக்கவில்லை. எனினும் இது பெரும் பிரச்சினையல்ல என்றும் ரசிகர் வன்முறையே உண்மையான பிரச்சினை என்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடுக்கும் நோக்கமாக 3இங்கிலாந்து ரசிகர்கள் 20 நாள் சிறைவாசம் பெற்றுள்ளார்கள். இவர்கள் சிறையில் இருந்து தொலைக் காட்சியில் ஆட்டங்களைப் பார்த்து ரசித்துக் கொள்ளலாம். இன்னொரு வன்முறைக் கும்பலின் தலைவன் இத்தாலியப்பொலிசாரால் லாவகமாக மடக்கிப் பிடிக்கப்பட்டு இங்கிலாந்துக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். இதைவிட போதை மருந்துடன் இன்னும்இரு ஆங்கிலேயர் பொலிஸாரிடம்அகப்பட்டுள்ளனர்.

இதேவேளை வேறு நாட்டு ரசிகர்களும் வன்முறையைத் தூண்டாமல் இருப்பார்களா? என்பது பொலிஸாருக்குப்பிரச்சினை. எது எவ்வாறாயினும் வன்முறையாளர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் அதோடு நோடியாக ஆட்டங்களைக் காணும்வாய்ப்பையும் இழப்பர்.

### மத்தியஸ்தர் படுர்பாடு

எந்தவொரு விளையாட்டிலும் ரசிகர்களின் தாக்குதலுக்கும், திட்டுக்களுக்கும் உள்ளாகுபவர்கள் மத்தியஸ்தர்களே. இது உதைபந்தாட்டத்தில் சிறிது அதிகமென்றே கூறலாம். இதனால் மத்தியஸ்தர்கள் தம் கடமையைச் சரிவரச் செய்ய இயலாமல் போவதும் உண்டு. இம்முறை ஏற்பாட்டாளர்களால் மத்தியஸ்தர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது பிழைவிடும் வீரர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்என்பதில் ஏற்பாட்டாளர்கள் மிகக் கவனமாக இருக்கிறார்கள். இது மத்தியஸ்தருக்குச் சங்கடத்தைக் கொடுக்கக்கூடும். எனினும்கடமையை மிகச் சரியாகச் செய்யவும் தூண்டும். இன்னொரு ஏற்பாட்டில் ஏற்பாட்டாளர்கள் மத்தியஸ்தருக்கு ஒருபாதுகாப்பையும் கொடுத்துள்ளனர்.

அதாவது ரெலிபீம் எனப்படும் மிக நுண்ணிய கருவிகளைஉபயோகித்து தொலைக் காட்சியில் ஆட்டங்களைக் காட்ட வேண்டாமென்றும் அவை மிக நுண்ணிய பிளவுகளையும் காட்டிவிடுவதாகையால் மத்தியஸ்தர்மட்டுமன்றி ரசிகர்கள் மத்தியிலும் ஆட்ட வேளையிலேயே அரங்கினுள் பதட்டம் ஏற்பட்டுவிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

### அதிர்ச்சி வைத்தியம்

முதலாவதுஆட்டத்திலேயே உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் அதிர்ச்சி வைத்தியத்திற்குள்ளாகி விட்டார்கள். இறுதித்தர அணிகளுள் ஒன்றாகக் கருதப்பட்ட கமரூன்அணி உலகச் சாம்பியன் ஆர்ஜென்ரீனாவை 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. இதுபலவித உணர்வலைகளை ரசிகர்கள்மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஆட்டத்தின் 66வது நிமிடத்தில் பிரான் கொப்ஸ் ஓமான் பியாக் தலையினால் தள்ளிய பந்து ஆர்ஜென்ரீன கோல் காப்புவீரர் நெரிபொம்பிடோவைத் தடவியவாறே எல்லையைக் கடந்துவிட்டது.

சமரூனுக்கு இவ்வெற்றியில் அதிர்ஷ்டமும் துணை நின்றிருக்கிறதென்றே தோன்றுகின்றது. இருந்தும் இறுதி 20 நிமிட ஆட்ட வேளையை 9 ஆட்டக்காரர்களுடன் மட்டும் கமரூன் சமாளித்துக் கொண்டது சிறப்பம்சமாகும்.

இன்னொரு ஆட்டத்தில் சோவியத் ரஷ்யா, றோமனியாவிடம் 2-0 என்ற கோல் கணக்கில் தோற்றுப்போயிற்று இது இரண்டாவது அதிர்ச்சி. றோமானியாவின் இரண்டாவது கோல் பெனால்டி மூலம் போடப்பட்டதாகும். இதில் சிறிது சர்ச்சைகள் இருந்த போதும் ரஷ்யா அணி எவ்வித மறுப்பும் இன்றி உன்னத பாணியில் முடிவை ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது இன்னொருஎதிர்பாராத முடிவாக பலம் குறைந்த கோஸ்டாரிக்கா அணி ஐரோப்பிய அணியான ஸ்கொலாந்தை 1-0 என்ற வித்தியாசத்தில் தோற்கடித்துவிட்டது.

உலக உதைபந்தாட்ட வரலாற்றில்அதிர்ச்சிகள் என்றோ ஏற்பட ஆரம்பித்துவிட்டன. 1950 இல் பலம் வாய்ந்த இங்கிலாந்தை மிகப் பலம் குறைந்த ஐக்கிய அமெரிக்கா 1-0 என்று தோற்கடித்தமை முதலாவது சம்பவமாகும். அடுத்து 1966 இல் இத்தாலி வடகொரியாவிடம் 1–0 என்ற வித்தியாசத்தில் தோற்றுப் போயிற்று. தொடர்ந்து 1974 இல் கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனியை 1–0 என்ற வித்தியாசத்தில் தோற்கடித்தது பின்னர் 1982 இல் மேற்கு ஜேர்மனி அல்ஜீரியாவிடம் 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்றுப்போயிற்று 1990இல் ஆரம்பமே அதிர்ச்சியாக இருக்கிறது. போகப்போக இன்னும் என்னென்ன அதிர்ச்சிகள் ரசிகர்களுக்குக் காத்திருக்கின்றனவோ தெரியவில்லை. எதிர்பாராத அணிகள் வெல்வதும், உதைபந்தாட்டச் சக்கரவர்த்திகள் மண்கௌவுவதும் ஆட்டத்துக்கு மேலும் மெருகூட்டுவதாகத் தான் அமையும். ஆர்ஜென்ரீனாவும், ரஷ்யாவும் தம் ஆட்டங்களில் தோல்வியுற்றமையால் இவ்விருவரும் மோதும் போது அவ்வாட்டம் மிக விறுவிறுப்பாக அமையப் போகிறது இருவருமே வெல்ல வேண்டும். யாரோ ஒருவர் தான் வெல்லமுடியும்.

இன்னும் ஆட்டங்கள் நிறைய இருக்கின்றன. ஜூலை 8 வரை தொடரப் போகின்றன. எப்படியும் உலகக் கிண்ணத்தை எடுத்தே தீருவோம் என்று நிற்கும் அணிகள் என்ன வகையில் ஆட்டங்களைக் கொண்டு போகப்போகிறார்கள். ஆட்டங்களை தொடர்ந்து ரசித்து வருவோம்.

**நிர்மலன்**

(வாஷிங்டன்)

ஈரானுக்கு இரகசியமாக ஆயுத விற்பனை செய்த குற்றச் சாட்டின் மீது அமெரிக்க ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் ஜோண் வொயின் டெக்ஸ்ரருக்கு ஆறு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானுக்கு இரகசியமாக ஆயுத விற்பனை செய்துஅதன் லாபத்தை நிக்கரகுவா கொன்றா கிளர்ச்சிக்காரருக்கு வழங்கிய விடயத்தை இவர் மூடி மறைக்க முயற்சித்ததாக குற்றம் சட்டப் பட்டார்.

வேறு அதிகாரிகள் மீதும் இது தொடர்பான விசாரனைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

## சோவியத் வத்திக்கான் உறவு

(வத்திக்கான்)

சோவிய ரஷ்யாவுக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான உறவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோவியத் யூனியனின் முதலாவது வத்திக்கான் தூதுவராக யூரி கர்லோங் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமது நியமனத்தை பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரிடம் ஒப்படைத்தார்.

## சிந்துமாகாண கலவரத்தை ஐ.நா.பார்வையிட வேண்டும்

(கராச்சி)

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் இடம் பெறும் இனக் கலவரங்கள் விடயங்களை ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் பார்வையிட வேண்டும் என இங்குள்ள அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டம்ஒழுங்கை ஏற்படுத்த இங்கு ஏற்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப் படவேண்டும். எனபாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கும் ஜனாதிபதி குலாம் இஸாக்கானுக்கும் சிந்து மாகாண எதிர்க் கட்சித் தலைவர் கேட்டுள்ளார்.

சிந்து மாகாண சபை சட்ட சபையை பகிஷ்கரிக்கப் போவதாகவும் எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

## கோஸ்டாரிக்காவிடம் ஸ்கொட்லாந்து தோல்வி

தற்போது நடைபெற்று வரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித்தொடரில் பிரிவு 'சி' ஆட்டம் ஒன்றில் ஆச்சரியப்படத்தக்க வகையில் கோஸ்டா ரிக்கா ஸ்கொட்லாந்தை 1-0 என்ற கோல்வித்தியாசத்தில் தோற்கடித்தது. இன்னொரு 'எப்' பிரிவு ஆட்டமொன்றில் இரண்டு ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்தும், அயர்லாந்தும் தலா ஒவ்வொரு கோல் போட்டுச்சமப்படுத்திக் கொண்டன.

## வவுனியா டிப்போவிற்குரிய பஸ் சேவைகள் சீராக இல்லை

(வவுனியா)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவிற்குரிய பஸ்சேவைகள் சீராக இயங்கவில்லை.

இதன் காரணமாக இம்மாவட்டத்தில் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர்.

இதுபற்றி வவுனியா டிப்போவுடன் தொடர்பு கொண்ட போது, போதிய பஸ்கள் இல்லாத காரணத்தினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது என்று இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தகால வன்செயலுக்குப் பின்னர் அமைதி ஏற்பட்டு பல மாதங்களாகி விட்டன. இந்த நிலையிலும்கூட கல்மடு, சேமமடு போன்ற பகுதிகளுக்கான உள்ளூர் பஸ்சேவைகள் மேற்கொள்ளப்படவில்லை.

சேவையில் ஈடுபடும் சில பஸ்கள் பெரிதும் பாதிப்படைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பகுதியில் சீரான பஸ்சேவை மேற்கொள்வது பற்றி வவுனியா பஸ் டிப்போ பகுதியினர் அக்கறை எடுத்து வருவதாகத் தெரியவில்லை.

(தி)

## கலைநிகழ்ச்சியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வேலணைக்கல்விக் கோட்டத்தில் இசை, நடன, சித்திர ஆசிரியர்கள் நடாத்தும் கலை நிகழ்ச்சியும், கண்காட்சியும் சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு முப்பது மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சிக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் திரு இராசுந்தரலிங்கம் அவர்களும் பாரியாரும்பங்குபற்றுவார்கள் இந்நிகழ்ச்சியை வேலணை இசை, நடன, சித்திர ஆசிரியர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

(அ)

# பாடசாலை உணவு முத்திரை தொடர்பான சுற்று நிருபம்

(புங்குடுதீவு)

பாடசாலைகளில் மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரை தொடர்பாக சகல பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஒரு மாணவனின் முத்திரையின் பெறுமதி மூன்று ரூபாவாகும். அந்தந்த மாதங்களில் மாணவர் வருகைதந்த நாட்களின்படி இந்த முத்திரைகள் உரித்தாகும்.

பாடசாலைகளின் அதிபர்களும் பிரதேச உதவி அரச அதிபர்களும் இந்த முத்திரை பெறுநர்களான மாணவர்கள் இணைக்கப்படவேண்டிய கிளையினை கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவிப்பார்.

முத்திரை பெறுபவர்கள் தமது முத்திரைகளைக் கிளைகளுக்கு சமர்ப்பிக்கும்போது அவற்றின் பெறுமானத்திற்கு சமமான பொருள்கள் விநியோகிக்கப்படும்.

அரிசி, உப்பு, சிறுதானியம், மிளகாய், சர்க்கரை, சீனி தேசிய பழவகைகள், தயிர், பால், பருப்பு வகை, கிழங்கு வகைகள், காய்கறி வகைகள் தேசிய உணவு வகைகள், மீன் முட்டை, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பாடசாலை உபகரணங்கள் போன்ற பொருட்களைத் தவிர பிறபொருட்கள் எவையும் விநியோகிக்கப்படலாகாது.

குறிப்பாக மேற்படி பொருட்கள் யாவும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களாக அமையவேண்டும்.

மாதாந்த மாணவ முத்திரைப்பெறுமானத்தில் கிட்டத்தட்ட ஐம்பது வீதத்தினை அரசஅதிபர் காரியாலயத்தில் இருந்து கூட்டுறவுச்சங்கம் முற்பணமாகப் பெறமுடியும்.

மாணவரின் முத்திரைப் பொருட்களின் விநியோக நடவடிக்கைகளில் ஏற்படும் கொடுப்பனவுகளுக்காக மட்டுமே இம் முற்பணத்தினை உபயோகிக்க வேண்டும்.

மாதத்திற்கு ஒருமுறையென ஒவ்வொரு மாத முடிவிலும் முத்திரைகள் மாணவமாணவிகளுக்கு வழங்கப்படும் இந்த முத்திரைகள் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதித்தினத்திலிருந்து நான்கு வாரங்கள் கொண்ட காலத்திற்கு செல்லுபடியாகும்.

மேலும் இத்திட்டத்தின்படி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சங்கத் தலைமை காரியாலயத்திற்கும், பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் பல்வேறு அறிவுரைகளும் இச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)

## "வங்கியின் போக்கில் மாற்றம் அவசியம்" -மத்திய வங்கி ஆளுநர்

(கண்டி)

இவ்வாண்டுக்குப் பின் உலகில் முக்கியமான ஒரு புரட்சி ஏற்பட இருக்கிறது. நான் மூன்று ஆண்டுகளுக்கு முன் கூறியவை இன்று நடைபெறுகின்றன. நானா விதமான அரசியல் குறிக்கோள்களும்மாற்றமடையும். 1990க்குப் பின் வங்கி முறையிலும் மாற்றம் ஏற்படும். இவ்வாறு மத்திய வங்கியின் ஆளுநர் லேலாநிதி கருணத்திலக்காகூறினார்.

கண்டியில் டன்கொல என்ற இடத்தில் சிறு கமக்காரர், நிலமற்றோருக்கான கடன் திட்ட வங்கிக் கிளை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய கருணத்திலக்கா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மத்தியவங்கி ஆரம்பித்து இன்று 40வருடங்கள் ஆகிவிட்டன என்றும், 40 வருடங்கள் ஒரு நீண்ட காலப் பகுதி என்றும், மத்திய வங்கி பற்றித் தான் ஒரு நூல் எழுத உள்ளதாகவும்,அந்த நூலில் சாதாரண மனிதனுக்கு வழங்கப்பட்டகடன்வசதிபற்றியும் எழுதப்படும் என்றார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

வங்கிகளின் போக்கில் அவசிய விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும் நிராகரிப்பது தேசிய வழக்கமாகி விட்டது.

'மறுப்பு' 'நிராகரிப்பு' என்ற சொற்கள் அன்றாட வழக்காகி விட்டது. எந்தப் புதிய திட்டத்துக்கும்முட்டுக்கட்டை போடுவது சகஜமாகி விட்டதென்றும் எமது மனப் பாங்கு மாறவேண்டும் என்றார்.

## காலிதுறைமுக புனரமைப்பிற்கு 80 லட்சம் டாலர்

கொழும்பு - காலி புனரமைப்பு வேலைகளுக்கு தென் கொரியா ஒரு கோடியே 80 லட்சம் டொலர்களை வழங்குவதாக உறுதி அளித்திருக்கிறது.

தென் கொரிய தொழில் நுட்பமுறையை பயன்படுத்தி 110கிலோ மீற்றர் தூரத்திற்கான இந்தப்பாதை 5 வருடங்களில் புனரமைக்கப்படும்.

இலங்கைக்கு உதவியளிக்க தென் கொரியா முன்வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

## தொண்டர் ஆசிரியர் விபரம் மக்கள் முன்னணி கோருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களிடமும் கீழ்காணும் முறைப்படி தொண்டர் ஆசிரியர் சங்கம் விண்ணப்பங்கள் கோருகிறது.

பெயர், விலாசம், கற்பித்த பாடசாலையின் பெயர், பிறந்த திகதி, தகைமை, சேவைக் காலம், நியமனக்கடித இலக்கம், கற்பித் பாடம், குறிப்பு

பாடசாலையில் இருந்து சேவை நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேறாகவும், தொடர்ந்தும் சேவையிலுள்ளவர்கள் வேறாகவும், கோரப்படுகின்றது. சேவையிலிருந்து நீக்கம்

## பெண்ணின் மரணம் தற்கொலையா? கொலையா?

## பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் நிலவும் குளிர்சாதனவியல் பொறியியலாளர்கள் தட்டுப்பாட்டை நீக்க கல்வித் திணைக்கள முறைசாரா பிரிவு திட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த பயிற்சியாளருக்கு சான்றிதழ் அண்மையில் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்திற்கு முறைசாரா பிரிவின் அதிகாரிகள் உட்பட தனியார் குளிர்சாதன ஸ்தாபன உரிமையாளர்களும் பங்குபற்றி மாணவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்கினார். (அ)

# மக்கள் பார்வையாளராக இல்லாமல் பங்காளிகளாக மாற வேண்டும் -டொமினிக்

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியானது தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கட்சியல்ல. எமது போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுவதே அதன் நோக்கமாகும்.

போராட்டமானது ஆயுத ரீதியாக இருக்கலாம் அல்லது அகிம்சைரீதியாக இருக்கலாம். எது எப்படியாயினும் மக்கள் பார்வையாளர்களாக இருக்காமல் பங்காளிகளாக மாற வேண்டும். அரசியல் கட்சி பற்றிய அறிவு எமது மக்களிடையே உண்டு. ஆனால் முன்னைய அரசியல் கட்சிகளை விட எமது கட்சிவேறுபட்டது.

நாம் போராட்ட காலத்தில் எம்முடன் நின்ற மக்களைத்தான் கட்சியில் சேர்த்துள்ளோம். எமது இயக்கத்தைப் பொறுத்தவரை விசுவாசம் தேவை. கட்சியை இயக்கத்தை வைத்து தனிப்பட்ட பெயரைப்புகழைவிரும்புவோர்களுக்கு இங்கு இடமில்லை உங்களது துணிச்சல்தான் எமக்கு துணிச்சலைத் தரும். எந்த அளவு எமது போராட்டத்திற்கு ஆதரவு தருவீர்களோ அந்தளவுக்கு எமக்கு வெற்றியுண்டு.

வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் தீவுப்பகுதி மக்கள் முன்னணி பிரமுகர் திரு. நரேஸ் தலைமையில் நடைபெற்ற தீவுப்பகுதி சிற்றூரவை தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு, டொமினிக் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிற்றூரவையில் இருந்து வட்டவைக்கு உறுப்பினர்களை தெரிவுசெய்யும் வைபவத்திலே இவ்வாறு அவர் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் முதன் முதலில் தெரிவு செய்யப்பட்ட வட்டவை உறுப்பினர்கள் தெரிவுக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் முன்னணி தலைமை செயற்குழு உறுப்பினர் திரு செங்கதிர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது

மக்கள் முன்னணி உறுப்பினர்கள் எமது எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி செயல்பட வேண்டும். நாம் எமது எதிர்கால சந்ததியினரின் தலைவிதியை நிர்ணயிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம் கடந்தகால பாராளுமன்ற கதிரைகளை நம்பி எமது மக்களை பயன்படுத்திய கட்சியாக அல்லாது எமது மக்களின் சுய நிர்ணய உரிமைகளை காக்கும் கட்சியாக இக்கட்சி உள்ளது. நாம் அவசரப்பட்டு செயற்பட முடியாது அப்படி செயற்பட்டால் அது சீர்குலைந்து எமது சந்ததியை அழித்து விடும். நாம் நிதானமாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும்.

கட்சியில் இருக்கும் நீங்கள் இறுமாப்புக் கொள்ளாமல் மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். உங்கள் செயற்பாடுகள் சுதந்திரமாக, தனித்துவமாக இருக்க வேண்டும். மூன்று வடிவங்களாக எமது போராட்டம் செயல்பட்டு வருகின்றது. ஒன்று அரசியல் ரீதியாக, மற்றையது ராஜதந்திர ரீதியாக, அடுத்தது இராணுவ ரீதியாக. நீங்கள் பொறுமையாக செயல்பட வேண்டும். தமிழீழ மக்கள் பூரண அரசியலைப் பெற்று பூரண சுதந்திரத்தைப் பெறவேண்டும்.

அமைதியான சூழ்நிலைக்குட்பட்டதாக எமது கட்சி அமைக்கப்படவில்லை.போர்க்கால நெருக்கடி நிலையிலும் அது செயற்படத்தக்கதாகவும் இருக்க வேண்டும். நாம் ஒரு இலக்கை நோக்கி செல்கின்றோம். அதற்குக் கட்சி உறுதுணையாக இருக்கவேண்டும் என்றார்,

இக்கூட்டத்தில் மகளிர் முன்னணி தீவகப் பொறுப்பாளர் செல்வி சோபிகாவும் வேலணை கொத்தணி அதிபர் திரு. பொ. கேதாரநாதனும் உரையாற்றினர். (15)

## வீடமைப்புத்திட்டத்தில் வீடு பெற்றுத்தர லஞ்சம்

(கொழும்பு)

வீடமைப்புத் திட்டத்தில் வீடு பெற்றுத் தருவதாக பலரிடம் லஞ்சம் வாங்கிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் மீது இருபத்திநான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. இரண்டரை லஞ்சம் ரூபாவை இவர் இவ்வாறு லஞ்சமாகப் பெற்றுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நபர் ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் இளைஞர் மன்றத்தின் முன்னாள் உறுப்பினருமாவார்.

பிணையில் சென்ற இவர் பின்னர் நீதிமன்றம் வராமல் தலைமறைவாகி வந்தார். தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டார். மீண்டும் பிடிபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## வவுனியா ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை

(வவுனியா)

ஒரு காலத்தில் பாம்பு கடி வைத்தியத்திற்கு, சிறந்த வைத்தியசாலை என்று பெயர் பெற்ற வவுனியா அரசாங்க வைத்தியசாலையில்தற்போது பாம்பு கடித்தவருக்குச் சிகிச்சை செய்யமுடியாமல் இருப்பதாக அறியப்படுகிறது.

வைத்தியர் பற்றக்குறையினாலும், மருந்துத் தட்டுப்பாட்டாலுமே இந்தநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியைச் சேர்ந்த வில்வராசா என்பவர். பாம்பு கடித்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது மரணமானார்.

இதே சமயம் வவுனியா வைத்தியசாலைக்கென்று இரு அம்புலன்ஸ் வண்டிகள் உண்டு. இவற்றில் ஒன்று பழுதடைந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. மேற்படி அம்புலன்ஸ் வண்டிகளை ஓட்டும் இரு சாரதிகளில் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பதால், அவசரமான நேரத்தில் அவரது சேவையைப் பெறுவது சிரமமாக இருப்பதாகவும் வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

## மக்கள் மயப்படுத்தலினால்

யாழ் மக்களுக்கு
புதியதோர் சேவை !
குறுகிய காலத்தில்
தரமான
கலர் பிலிம்
விரைவாக
கழுவுவதற்கு
Cosmos Marketing Services
1st Floor

## 80 லட்சம் டாலர்

கொழும்பு - காலி புனரமைப்பு வேலைகளுக்கு தென் கொரியா ஒரு கோடியே 80 லட்சம் டொலர்களை வழங்குவதாக உறுதி அளித்திருக்கிறது.

தென் கொரிய தொழில் நுட்பமுறையை பயன்படுத்தி 110கிலோ மீற்றர் தூரத்திற்கான இந்தப்பாதை 5 வருடங்களில் புனரமைக்கப்படும்.

இலங்கைக்கு உதவியளிக்க தென் கொரியா முன்வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

திட்டத்துக்கும்முட்டுக்கட்டை போடுவது சகஜமாகி விட்டதென்றும் எமது மனப் பாங்கு மாறவேண்டும் என்றார்.

தருக்கும் பல்வேறு அறிவுரைகளும் இச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(22)

### தொண்டர் ஆசிரியர் விபரம்

# மக்கள் முன்னணி கோருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களிடமும் கீழ்காணும் முறைப்படி தொண்டர் ஆசிரியர் சங்கம் விண்ணப்பங்கள் கோருகிறது.

பெயர், விலாசம், கற்பித்த பாடசாலையின் பெயர், பிறந்த திகதி, தகைமை, சேவைக் காலம், நியமனக்கடித இலக்கம், கற்பித் பாடம், குறிப்பு

பாடசாலையில் இருந்து சேவை நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேறாகவும், தொடர்ந்தும் சேவையிலுள்ளவர்கள் வேறாகவும், கோரப்படுகின்றது. சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள் குறிப்பு என்னும் இடத்தில் நீச்கப்பட்டதற்கான காரணம், நீக்கப்பட்ட ஆண்டு ஆகியவற்றுடன் விளக்கமாக அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவுத்தபாலில், செல்வி தே. மாலா, 85, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்படல் வேண்டும் என்றும் விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 16 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பெண்ணின் மரணம் தற்கொலையா? கொலையா?

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, பத்தமேனி என்னும் இடத்திலுள்ள கூட்டுறவுக் கடைக்குப் பின்புறத்திலுள்ள மஞ்சவண்ணா மரத்தில் கடந்த 8 ஆம் திகதி இரவு பெண் ஒருவர் கழுத்தில் தூக்குப் போட்டுத் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

அவ்வூர் மக்கள் கிராம சேவகரின் உதவியுடன் அப்பெண்ணை அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர். ஏற்கனவே அப்பெண் இறந்திருப்பது தெரியவந்தது. இதனால் இவர் யாழ்போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டார்.

அப்பெண்ணின் கழுத்தில் அவர் உடுத்தி இருந்த சேலையே தூக்குக் கயிராகச் சுற்றப்பட்டிருந்தது. அத்துடன் அவர் கழுத்தில் இழைக் கயிறும் சுற்றப்பட்டிருந்ததைக் கண்ட யாழ் போதனா வைத்தியசாலைப் பொலிசார் விசாரணையை மேற்கொண்டனர்.

இவர் தொண்டமனாறு, செருடாவிலைச் சேர்ந்தவர் என்றும் கந்தையாவின் மனைவி ராசமணி வயது 64 என்றும் தகவல்கள் விசாரணையின் போது தெரியவந்தது. இவரது உடல் யாழ் நீதவானின் உத்தரவின் பேரில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையில் இவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது மேலும் இவரது கால் நிலத்தில் இருந்து நாலு அடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்ததாம் இப்பெண்ணின் மரணம் பற்றி பொலிஸார் தமது புலன் விசாரணையை தொடர்ந்து வருகின்றனர்.

(ம)

# வைத்தியா பற்றாக்குறை

(வவுனியா)

ஒரு காலத்தில் பாம்பு கடி வைத்தியத்திற்கு, சிறந்த வைத்தியசாலை என்று பெயர் பெற்ற வவுனியா அரசாங்க வைத்தியசாலையில்தற்போது பாம்பு கடித்தவருக்குச் சிகிச்சை செய்யமுடியாமல் இருப்பதாக அறியப்படுகிறது.

வைத்தியர் பற்றச்குறையினாலும், மருந்துத் தட்டுப்பாட்டாலுமே இந்தநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியைச் சேர்ந்த வில்வராசா என்பவர். பாம்பு கடித்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது மரணமானார்.

இதே சமயம் வவுனியா வைத்தியசாலைக்கென்று இரு அம்புலன்ஸ் வண்டிகள் உண்டு. இவற்றில் ஒன்று பழுதடைந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. மேற்படி அம்புலன்ஸ் வண்டிகளை ஒட்டும் இரு சாரதிகளில் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருப்பதால், அவசரமான நேரத்தில் அவரது சேவையைப் பெறுவது சிரமமாக இருப்பதாகவும் வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(தி)

### மக்கள் மயப்படுத்தலினால்

# பஸ் சேவைக் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்துவதனால் பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என்றும், பாடசாலை பஸ் சேவைகள்தொடர்ந்தும்இடம் பெறுவதோடு கிராமப் புறங்களிலும் சேவை விரிவு படுத்தப்படும். அத்துடன் மாணவர்க்கான பருவகாலச் சீட்டுக்களும் முன்போல் வழங்கப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் திரு. விஜேபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இதற்கு மாறாக அதிக திறமையுடனும், சிறந்த நிர்வாகத்துடனும் பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலையிலும் செயற்படுவதன் மூலம் காலப்போக்கில்பஸ்கட்டணங்கள் குறைந்து விடும் சாத்தியக்கூறு இருப்பதாகவும்;

இம்மக்கள் மயப்படுத்தும் திட்டம் காரணமாக எந்தவொரு ஊழியரும் பதவியில் இருந்து ஒய்வு பெறுமாறுநிர்ப்பந்திக்கப்படவோ அன்றி வேலையிழக்கவோ நேரிடாது என்றும் அமைச்சர் கூறினார்.

# ஹொலிவூட் ஆங்கிலப் படம் திரையிடல் நிறுத்தம்

(கொழும்பு)

ஹொலிவூட் ஆங்கிலப் படங்கள் ஸ்ரீலங்காவில் திரையிடப்படுவது இனிமேல் நிறுத்தப்படும். தேசிய சினிமாக் கூட்டுத்தாபனம் ஹொலிவூட் பட விநியோகஸ்தர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் நிலுவையாகவுள்ளது. இதே வேளை ஹொலிவூட் பட விநியோகஸ்தர்களும் தேசிய சினிமாக் கூட்டுத்தாபனத்துக்குச் சேரவேண்டிய கமிசன் பணத்தை இதுவரை செலுத்தவில்லையாம். இந்த இழுபறியில் 11 மாதங்களுக்கு முன் ஹொலிவூட் ஆங்கிலப் படங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது.

ஹொலிவூட் பட விநியோகஸ்தர்களின் பிரதிநிதிக்கும், தேசிய சினிமாக் கூட்டுத்தாபனத்திற்கும் கொழும்பில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது நிலுவைப் பணத்தைச் செலுத்த தேசிய சினிமாக்கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்தது, ஆனால்ஹொலிவூட் சினிமா விநியோகஸ்தர்களிடம் தேசிய சினிமாக் கூட்டுத்தாபனம் கேட்ட 23% சழிவை ஹொலிவூட் பட விநியோகஸ்தர்கள் தர மறுத்துள்ளார்கள். இதனால் ஹொலிவூட் ஆங்கிலப்பட இறக்குமதி கைவிடப்பட்டுள்ளது.

# நயினாதீவு அம்மன் கோவில் கொடியேற்றம்

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பன் கோவில் வருடாந்த மகோற்சவம் வரும் சனிக்கிழமை (23. 6. 90) கொடியேற்றத்துடன்ஆரம்பமாகும்.

இவ் மகோற்சவம் யூன் மாதம் 8ஆம் திகதி தெப்பத் திருவிழாவுடன் இனிது முடிவுறும்.

பகல் திருவிழா காலை 8 மணியில் இருந்துபி.ப 1 மணி வரையும் இரவுத் திருவிழா மாலை 6 மணியில் இருந்து இரவு 11.00 மணி வரை நடைபெறும்.

போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம் கடந்தகால பாராளுமன்ற கதிரைகளை நம்பி எமது மக்களை பயன்படுத்திய கட்சியாக அல்லாது எமது மக் ...

... செல்வி சோபிகாவும் வேலணை கொத்தணி அதிபர் திரு. பொ. கேதாரநாதனும் உரையாற்றினர். (15)


யாழ் மக்களுக்கு
புதியதோர் சேவை !

குறுகிய காலத்தில்
தரமான
கலர் பிலிம்
விரைவாக
கழுவுவதற்கு

**Cosmos Marketing Services**
1-st Floor,
337, Kasthuriar Road,
**JAFFNA.**

(B/1160)


# மரண அறிவித்தல்



## இராமுப்பிள்ளை முத்துலிங்கம்

உரும்பராய் சந்தியைச் சேர்ந்த திரு. முத்துலிங்கம் 06. 06. 1990 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் திருமதி மு. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (சவூதி), தயாலிங்கம் (சவூதி) தயாநிதி, பாக்கியராஜா (கண்ணன் - சவூதி), பரமேஸ்வரன் (வரன் -ஜேர்மனி), கலாநிதி - (ஜேர்மனி), ஜெயாநிதி, நீதிராஜன், இன்பராஜன் (கனகசூரியம் அன் கொம்பனி - கொழும்பு), சிவாநிதி (ஜேர்மனி), தயாகரன் (உரும்பராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராணி (வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை-கனடா), சகுந்தலாதேவி, மேரி ஆனந்தன் (கிறீன்லன்ஸ் பாம் உரிமையாளர்), சத்தியநாதன் (ஜேர்மனி), யசோதா (இ. தே. தோ. தொ. சங்கம், கொழும்பு), வேயாபின (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும்; விஜித், திலக், பிரதீப், கௌரி நந்தனன், சிந்துஜா, நிரோஷ், சஜீவ், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (13-06-90) பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின் தகனக் கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உரும்பராய்ச் சந்தி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

R. 352


# கம்பியூட்டர் கல்வி

- BASIC
  ஆரம்பம்: 25 - June - 1990 8-30 A. M.
- dBASE III PLUS
  ஆரம்பம்: 14 - June - 1990 10-30 A. M.
- LOTUS 1-2-3
  ஆரம்பம்: 14 - June - 1990 9-00 A. M.




**UNIKCO**
**COMPUTER CENTRE**
No. 5, 2nd Lane, Power House Road,
**JAFFNA.**

Join with us to Study the Latest Computer Technology

(B-1019)

### சிந்தனைக்கு

எறும்புகள் சிறந்த குடிகள், தங்கள் இனநலனையே தலையாயதாகப் போற்றுகின்றன, அவை.

- ஹென்றி டேவிட் தோரோ

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 13-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## அப்பாவி மக்கள் பலியாக வேண்டுமா?

லெபனானின் கிழக்கு பெய்ரூட்டில் முஸ்லிம் படைகளுக்கும் கிறிஸ்தவப் படைகளுக்குமிடையில் மீண்டும் கடும் சண்டை நடைபெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சண்டையில் பலர் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பாகிஸ்தானில் சிந்துமாகாணத்தில் நடைபெற்றுவரும் இனக்கலகங்களில் கடந்த ஒன்றரை வாரத்தில் மட்டும் நானூற்றி ஐம்பது பேர் பலியாகியிருக்கின்றனர். இன்னமும் கலகம் நீடித்து வருகிறது.

இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் தொடர்ந்து வன்செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மதத்தலைவர்கள், கல்விமான்கள் கொல்லப்படுகின்றனர்; இந்திய உள்துறை அமைச்சரின் மாமனாரும் சில தினங்களுக்குமுன் கொலை செய்யப்பட்டார். காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகளும் அதிகம்.

நீண்டகாலமாகப் போராட்டத்தின் விளைவாக 1947 ஆம் ஆண்டில் இந்திய உபகண்டத்திலிருந்து பிரிட்டிஷார் வெளியேறும்போது ஜின்னா தலைமையில் முஸ்லிம்களுக்கு உபகண்டத்தின் ஒரு பகுதியைப் பிரித்துப் பாகிஸ்தான் என்று கொடுத்துவிட்டுச் சென்றனர்.

இந்தியா - பாகிஸ்தான் என இரு கூறாகப் பிரிந்த உபகண்டத்தில் காஷ்மீர் ஒரு பிரச்சினையாகவே விடப்பட்டது. காஷ்மீரில் ஸ்ரீநகரைத் தலைநகராகக் கொண்ட பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலும் மறுபகுதி ஆஸாத் காஷ்மீர் என்ற பெயரில் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றன.

காஷ்மீர்மக்கள் தங்களுக்கு விடுதலைவேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். இதற்குப் பாகிஸ்தானே பின்னணியில் நிற்பதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது. மதத்தைக் கருவியாக வைத்து காஷ்மீரில் குழப்பத்தைப் பாகிஸ்தான் தூண்டிவிடுகிறது என்பதும் ஆயுதங்கள் வழங்குவதுடன் ஆஸாத் காஷ்மீர் வழியாக காஷ்மீருக்குள் குழப்பக்காரர்கள் நுழைகிறார்கள் என்பதும் இந்தியாவின் குற்றச்சாட்டு.

காஷ்மீர் பிரச்சினை இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் ஒரு யுத்தத்திலிறங்குவதற்கான நெருக்கடியை

# கனடா தமிழ் அகதிகள் கோலம் சிறுத்தை; அதன் புள்ளிகளை மாற்றமுடியுமா?

**கட்டுரையாளர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர். ஆறு வருடங்கள் கனடாவில் வாழ்ந்து வருகிறார். தாம் கண்டதையும், அனுபவித்தவற்றையும் இக்கட்டுரையில் தருகிறார். அவர் தனது பெயரை வெளியிடுவதை விரும்பவில்லை.**

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வதிவிடத்தை அமைத்துக் கொள்ளும் தமிழர்கள் தம்மை மற்றவர்கள் இனங்கண்டு கொள்ளாதிருப்பதற்காக பெற்றோர் அவர்களுக்குச் சூட்டிய அழகிய பெயர்களைப் பாம்பு செட்டையைக் கழற்றுவது போல் மாற்றிக் கொள்கிறார்கள். முற்றிலும் அந்நியமான பெயர்களை அவர்கள் தமக்குச் சூட்டிக் கொண்டாலும், நையாண்டியாகத் தென் ஆசிய மக்களை அழைக்கும் 'பாக்கி' (Paki) என்ற பெயராலேயே நம்மவர்களும் அழைக்கப்படுகிறார்கள். எது எப்படியானாலும் சிறுத்தை அதன் புள்ளிகளை மாற்ற முடியுமா?

கனடாவில் அகதிகள் என்று வாழும் தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதற்குத் தடைகள், முட்டுக்கட்டைகள் ஏற்பட ஒழுக்கமற்ற வெளிநாட்டுப் பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறார்கள் அல்லது அவர்களுடன் வாழ்க்கை நடாத்துகிறார்கள்.

தமிழ் இளைஞர்கள் தமது தாழ்வுச் சிக்கலுக்கு ஈடுசெய்யும் வகையில் தலைமயிரை நீளமாக வளர்த்து, காதணிகளை அணிந்து மற்றவர்களது கவனத்தைக் கவரப்பார்க்கிறார்கள்.

தமிழ் அகதிகள் எந்த வழியிலாவது கனேடிய டொலர்களை உழைத்த பிறகு தாங்கள் ஸ்ரீலங்கா அகதிகள் அல்லவென்று சொல்லி, ஏதோ வேறு நாட்டுப் பிரஜைகள் போல் நடந்து கொள்கிறார்கள். இது பெற்றவர்களுக்குப் பெரும் அவமானம் இல்லையா?

### புனர்வாழ்விற்கு துட்டு இல்லை

போதைவஸ்து, விஸ்கி, பியர், அந்நியப் பெண்கள், ஆடம்பரமான கார்கள், விலை உயர்ந்த ஆடம்பரப் பொருள்கள் இவற்றிற்கெல்லாம் பணத்தைக் கொட்டுகிறார்கள். சிங்கள அகதிகள் அல்லது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கு ஒரு துட்டும் தரமாட்டார்கள் நாட்டில் பொருளாதார புனருத்தாரணத்துக்கும் பணம் என்றால் அந்தப் பக்கம் தலை வைத்தும் படுக்கமாட்டார்கள்.

### ஸ்பொன்சர் கல்யாணம்

நாட்டை விட்டுப் புலம்பெயர்வதற்கு ஒத்தாசையாகத் தம்மைப் பொறுப்பேற்கும்படி 'ஸ்பொன்சர்) உயிர்ப்பிச்சை கேட்டுக் காலையும் கையையும் பிடிப்பார்கள். ஸ்பொன்சருக்காக கனடாவில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கனடாவில் குடியேறுவார்கள். கனடாவில் வேரூன்றியதும் ஸ்பொன்சர் செய்த பெண்ணிடமிருந்து விவாகரத்துக் கேட்பார்கள். அவள் இருக்க வேறொருத்தியைப் பார்ப்பார்கள். விவாகரத்துக் கொடுக்காவிட்டால் கொலை செய்யவும் தயங்கார். எவ்வளவு நன்றி கெட்ட சமூகம்?

கனடாவுக்கு வருபவர்கள் தம்மை ஸ்பொன்சர் பண்ணி அழைத்த உறவினர்களைப் பற்றித் தெரியாததுபோல் நடந்து கொண்டு தாம் அகதிகள் என்று சொல்லித்திரிவார்கள். முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முடியுமா?

தமிழ் அகதிகள் கனடாவுக்கு வந்ததும் அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. பொய்யான கதைகளைப் பரப்புவார்கள். நண்பர்களையும் நண்பர்களையும் கொழுவி விடுவார்கள். அப்துல்லாவுக்கும் அமாவாசைக்கும் முடிச்சுப் போடுவார்கள். செய்வதெல்லாம் நாரதர் வேலை.

### முள்ளுக்கரண்டி உணவு

கனடாவில் தமிழ் அகதிகள் தமது வீடுகளில் தோசை, இட்லி, வடை, பிட்டு இத்தியாதி உணவுகள் சாப்பிடுவார்கள். கனடாவுக்கு வந்ததும் கைகள் கூசுதாம்! மேற்படி உணவு வகைகளையும் கறண்டியும், முள்ளினாலும், தான் சாப்பிடுவார்கள் என்ன உலகம் இது?

குறுக்கு வழியில் பணத்தைச் சம்பாதிப்பதற்காகத் தமிழ் அகதிகள் ஒழுக்கம் கெட்ட பெண்களுக்குத் தரகர் வேலை செய்வதோடு, வேறு தவறான வழி முறைகளினால் பணத்தையும் சம்பாதிக்கிறார்கள். இச் செயல் மற்றத்தமிழர்களுக்கு அவமானத்தைத் தருவதாகும்.

தமிழ் அகதிகள் என்று கனடாவுக்கு வருபவர்கள் தங்க நகைகளையும், தங்கக் கட்டிகளையும் ஆயிரக்கணக்கில் டொலர்களையும் மூட்டை முடிச்சுகளுக்கிடையில் மறைத்துக் கொண்டு கனடாவுக்குள் நுழைந்து விடுகிறார்கள், மோசடி செய்து வேலைசெய்து வேலையற்றோர் காப்புறுதி நிதியையும் பெற்றுவிடுவார்கள். கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் நன்கொடைகளை இரட்சணிய சேவையினரிடமிருந்து பெறத் தவறுவதில்லை. அகதிகள் நன்மைகள் கோயில்களில் நன்கொடைகளையும் பெற்றுக்கொள்கிறார்கள். பிறகு காலப்போக்கில் கையும் மெய்யுமாக அதிகாரிகளிடம் மாட்டிக்கொண்டதும் அகதிகள் தலையில் போட்டு விடுகிறார்கள்.

### தமிழர்களுக்கு எதிரி தமிழரே

மேலும், கடத்தல், போதைவஸ்து வியாபாரம், ஏமாற்றுதல், களவு, அடாவடித்தனம், கராத்தே சண்டை, முதுகில் குத்துதல், கழுத்தறுக்கும் போட்டி ஆகியவற்றைத் தமிழ் அகதிகள் தமது சகோதரர்களாக தமிழர்களுக்கெதிராகவே செய்கிறார்கள்,

### பிரஜா உரிமை பெற்றுள்ளனர்

தமிழ் அகதிகளாக 1983 கலவரங்களுக்குப் பிறகு கனடாவுக்கு வந்தவர்கள் பலர் கனேடியப் பிரசைகளாக இன்று பிரஜா உரிமை பெற்று வாழ்கிறார்கள். பிச்சை கேட்டது போல் ஸ்பொன்ஸர் கேட்டு 1984 களில் இங்கு வந்தவர்கள் தமது உடன் பிறப்புகளை இங்கு அழைக்கவே பணம் கேட்கிறார்கள். 1984-ல் கனடா வந்து சேர்ந்த தமிழரான ஒரு அகதி மேற்கு ஜேர்மனியிலுள்ள தனது உடன்பிறப்பான சகோதரனின் மகனை கனடாவுக்கு அழைக்க ரூபா இரண்டு லட்சம் கேட்டுள்ளார்.

அகதித் தமிழர்கள் அயல் நாடுகளில் இப்படிக் குருட்டாட்டம் ஆடி, ஒருவர் கழுத்தை ஒருவர் நெரித்து ஒழுக்கக் கேடான வாழ்க்கை வாழ்ந்தால் தாம் இங்கிருந்து எங்கே போவது?

## ஊர்சுற்றி

### எழுதுவது

அண்மையில் கொழும்பு டீசொய்சா பிரசவவார்ட்டில் குழந்தை பெற்றஒரு பெண் மணியிடம், அவரதுகுழந்தைக்கான பிறப்புப் பதிவினை மேற்கொள்ள தந்தையின் பிறப்புப் பத்திரத்தில் இந்தியத் தமிழர் எனப் பதியப்படும் எனத் தெரிவிக்கப் பட்டதாம்.

ஒரு சத்தியக் கடுதாசி மூலம் தன்னை இலங்கைப் பிரசையாக பதிய முடியுமென்று அமைச்சர் தொண்டமான் பிரசாவுரிமையற்ற மக்களுக்கு கூறிவருகின்றார். இதனையும் அமைச்சர்கவனமெடுத்தல் நன்று.

வருகிற ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் தமிழ் இந்து கலாசர அலுவல்கள் அமைச்சினால் சாகித்திய மண்டல விழா மிக நீண்ட நாட்களுக்கு பின்னர் நடை பெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பி.வி. தேவராஜ் அவ் விழாவின் சிறப்பாக நடை பெறுவதற்கும், தகுதியான ஆக்கங்களுக்கும் இடம் வழங்கப் பட வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு, உரிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பற்றவர்களை நடுவர்களாக நியமிக்குமாறுகூறியுள்ளதாகக்கேள்வி. இது ஒரு ஆரோக்கியமான நல்ல அம்சம் வழமையாக கொழும்பின்விழாக்களில் குறித்த சிலரே ஆய்வாளர்களும், நடுவாளர்களாகவும் வருவதுகுறிப்

# வடக்குகிழக்கு மாகாண அலுவலகங்களில் தமிழ் மொழியின் பரிதாபநிலை

இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்திற்கு 18. 11. 1988 இல் கொண்டு

என்ற கேள்வியை தமிழ் பொது மக்கள் கேட்க விரும்புகின்றார்கள்.

கள். எனவே இக் குறைபாடுகளை நீக்குபவர்கள் யார்? என்பது பொதுமக்களுக்குத்

இருக்கின்றார்கள். இவர்களுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தி நிரந்தரமான நிய

இந்தியா - பாகிஸ்தான் என இரு கூறாகப் பிரிந்த உபகண்டத்தில் காஷ்மீர் ஒரு பிரச்சினையாகவே விடப்பட்டது. காஷ்மீரில் ஸ்ரீநகரைத் தலைநகராகக் கொண்ட பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலும் மறுபகுதி ஆஸாத் காஷ்மீர் என்ற பெயரில் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலும் இருந்து வருகின்றன.

காஷ்மீர்மக்கள் தங்களுக்கு விடுதலைவேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினர். இதற்குப் பாகிஸ்தானே பின்னணியில் நிற்பதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது. மதத்தைக் கருவியாக வைத்து காஷ்மீரில் குழப்பத்தைப் பாகிஸ்தான் தூண்டிவிடுகிறது என்பதும் ஆயுதங்கள் வழங்குவதுடன் ஆஸாத் காஷ்மீர் வழியாக காஷ்மீருக்குள் குழப்பக்காரர்கள் நுழைகிறார்கள் என்பதும் இந்தியாவின் குற்றச்சாட்டு.

காஷ்மீர் பிரச்சினை இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் ஒரு யுத்தத்திலிறங்குவதற்கான நெருக்கடியை ஏற்படுத்தியது. இது அணு ஆயுத யுத்தமாக விஸ்வரூபம் எடுத்துவிடலாமென்ற அச்சமும் தோன்றியது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர்பூட்டோ அரபு நாடுகளுக்குச் சென்று காஷ்மீர் பிரச்சினையில் தமக்கு ஆதரவு தேடினார்.

இச்சமயத்தில் பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் இனக்கலகம் வெடித்தது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது இந்தியாவிலிருந்து சிந்து மாகாணத்துக்குச் சென்று குடியேறியவர்கள் 'மொஹஜிர்' என்றழைக்கப்படும் முஸ்லிம்கள்.

இவர்களுக்கும் பாகிஸ்தான் முஸ்லிம்களுக்குமிடையில் 1947 ஆம் ஆண்டிலிருந்தே இடையிடை மோதல்கள் ஏற்படுவதும் பின்னர் சமாதானம் ஏற்படுவதும் வழக்கம்.

ஆனால் இம்முறை கலகம் மிகமோசமாகி ஒன்றரை வாரத்துக்குள் நானூற்றி ஐம்பது பேர் பலியாகியிருக்கின்றனர். இக்கலகத்துக்கு இந்திய உளவுப் பிரிவே காரணம் என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டியிருக்கிறது.

இந்தியாதான் இக்கலகத்துக்கு காரணமோ காரணமில்லையோ காஷ்மீர் பிரச்சினையில் மத்திய கிழக்கிற்குச் சென்று காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு அரபுநாடுகள் ஆதரவு வழங்க வேண்டியதற்கான காரணங்களை எடுத்துக்கூறி காஷ்மீர் பிரச்சினை பற்றி உரக்கப் பேசிவந்த பெனாசிர்பூட்டோ சிந்து மாகாணக் கலகத்துடன் ஒய்ந்துவிட்டாரென்பது மட்டும் உண்மை.

காஷ்மீர் பிரச்சினையானாலும்சரி சிந்துமாகாணப் பிரச்சினையானாலும்சரி லெபனானில் முஸ்லிம், கிறிஸ்தவர் பிரச்சினையானாலும் உலகில் எந்த நாட்டிலும் இனத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் நடக்கும் மோதல்கள் சண்டைகளுக்கு ஏதோ ஒரு அயல்நாடு பின்னணியில் நிற்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாதது.

தங்களுடைய ஆதிக்கப் போட்டியில் வெற்றியீட்டி ஆதிக்கத்தை நிலைநாட்டவும் ஆயுத விற்பனையில் பொருளாதாரத்தை வளம்படுத்திக்கொள்ளவும் இந்த நாடுகள் அப்பாவி மக்களைத் தமது பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றன.

தங்கள் ஆதிக்கத்தைநிலைநிறுத்துவதற்கு அப்பாவிப் பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் பலியாக வேண்டுமா?

---

தாழ்வுச் சிக்கலுக்கு ஈடுசெய்யும் வகையில் தலைமயிரை நீளமாக வளர்த்து, காதணிகளை அணிந்து மற்றவர்களது கவனத்தைக் கவரப்பார்க்கிறார்கள்.

தமிழ் அகதிகள் எந்த வழியிலாவது கனேடிய டொலர்

ஸ்பொன்சருக்காக கனடாவில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கனடாவில் குடியேறுவார்கள். கனடாவில் வேரூன்றியதும் ஸ்பொன்சர் செய்த பெண்ணிடமிருந்து விவாகரத்துக் கேட்பார்கள். அவள் இருக்க வேறொருத்தியைப் பார்ப்பார்கள். விவாக

சாப்பிடுவார்கள் என்ன உலகம் இது?

குறுக்கு வழியில் பணத்தைச் சம்பாதிப்பதற்காகத் தமிழ் அகதிகள் ஒழுக்கம் கெட்ட பெண்களுக்குத் தரகர் வேலை செய்வதோடு, வேறு தவறான வழி முறைகளினால் பணத்தையும் சம்பாதிக்கிறார்கள்.

டாவுக்கு வந்தவர்கள் பலர் கனேடியப் பிரசைகளாக இன்று பிரஜா உரிமை பெற்று வாழ்கிறார்கள். பிச்சை கேட்டது போல் ஸ்பொன்ஸர் கேட்டு 1984 களில் இங்கு வந்தவர்கள் தமது உடன் பிறப்புகளை இங்கு அழைக்

---

# வடக்குகிழக்கு மாகாண அலுவலகங்களில் தமிழ் மொழியின் பரிதாபநிலை

இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்திற்கு 18. 11. 1988 இல் கொண்டுவரப்பட்ட 10 ஆவது திருத்தத்தின்படி தமிழ் மொழி இலங்கையின் அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது. இதனை அமுல் நடத்தும் வகையில் பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண அமைச்சு மூன்று சுற்று நிருபங்களை இலங்கையிலுள்ள சகல அரசாங்க அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்தது.

இவ்வாறான சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளபோதிலும், இந்த சுற்றறிக்கைகளின் படி அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழியில் நிர்வாக அலுவல்கள் நடைபெறுகின்றனவா? என்பதைக் கண்காணிப்பதற்கும், அதனை சரியானமுறையில் அமுல் நடாத்துவதற்கும் பொது நிர்வாக அமைச்சில் எவ்வித கண்காணிப்புப் பிரிவும் இல்லை. இத் அமைச்சின் கீழ் அரசகரும மொழியின் ஆணையாளர் ஒருவர் (தற்போது இப் பதவியை வகிப்பவர் திரு. நிமால் சமர சுந்தர என்பவர்) இவருக்கும் தமிழ் மொழி அமுலாக்கல் பற்றி கண்காணித்து அதனை சரியான முறையில் அமுல் நடத்துவதற்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை. எனவே பொதுநிர்வாக அமைச்சும், அரசகரும மொழிகள் ஆணையாளரும் வெறுமனே சுற்றறிக்கைகளை மட்டும் அனுப்பிவிட்டு அவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சரியான முறையில் அமுல் நடத்தப்படுகின்றனவா? என்பதனை கண்காணிப்பதற்கு எவ்வித அதிகாரமும் இல்லாதவர்களாக உள்ளனர்.

எனவே பொதுவாக நாட்டின் ஏனைய அரச அலுவலகங்களிலும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க அலுவலகங்களிலும் தமிழ்மொழி அரசாங்கமொழியாக, நிர்வாக மொழியாக அமுல் நடத்தப்படுகின்றனவா? இல்லையா என்பதை கண்காணிப்பவர்கள் யார்? என்ற கேள்வியை தமிழ் பொது மக்கள் கேட்க விரும்புகின்றார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள எந்தவொரு அலுவலகத்திலும் தற்பொழுது தமிழ் மொழி முற்றாக அமுல் நடத்தப்படுவதில்லை அதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

1. கடந்த 40 ஆண்டுகாலமாக நாங்கள் ஆங்கில மொழியிலும் பின்னர் சிங்கள மொழிலும் அரசாங்க அலுவல்களை செய்து பழகி விட்டோம். தமிழில் செய்வதற்கு சங்கடமாகவுள்ளது என அரசாங்க உத்தியோகத்தர்கள் கருதுகின்றார்கள் தொடர்ந்தும் ஆங்கில மொழியிலேயே செய்வதற்கும் அவர்கள் விரும்பு

## மக்கள் மடல்

கின்றார்கள் இதே தமிழ் உத்தியோகத்தர்கள் தான் கடந்த 1956 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள மொழியில் படித்து தங்கள் பதவி உயர்வுக்காகவும் வருடாந்த சம்பள உயர்வுக்காகவும், பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்காகவும் சிங்கள மொழியில் அரசாங்க அலுவல்களை கவனித்தவர்கள் என்பது குறிபிடத் தக்கது. இவர்கள்தான் இன்று தமது தாய்மொழி தமிழ் அரச கரும மொழி ஆன பின்னரும் கூட அம் மொழியில் கடமையாற்ற முன்வராமல் பல்வேறுநொண்டிச்சாட்டுக்களை கூறிவருகின்றார்கள்.

2. தமிழ் தட்டெழுத்தாளர்கள் இல்லை. தமிழ் சுருக்கெழுத்தாளர்களில்லை. தமிழ் மொழி பெயர்பாளர்களில்லை, தமிழ் தட்டச்சுக் சருவிகள் இல்லை. தமிழ் மொழியை அரசகரும மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் நடைமுறைப் படுத்துவதற்கு வேறு பல தடவைகள் உள்ளன என்று வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்களின் தலைவர்களும் ஊழியர்களும் தெரிவிக்கின்றார்கள். எனவே இக் குறைபாடுகளை நீக்குபவர்கள் யார்? என்பது பொதுமக்களுக்குத் தெரியவில்லை. உண்மையில் இக் குறைபாடுகளை தீர்க்க வேண்டியது பொது நிர்வாக அமைச்சும் அரச கரும மொழிகள் ஆணையாளரும் மட்டுமே. அவர்கள் தான் திறைசேரியில் இருந்து தேவையான நிதியைப் பெற்று இக் குறைபாடுகளை நீக்கி தமிழ் மொழியை அரசமொழியாக அமுல் நடாத்த வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் இதில் எவ்வித கவனமும் செலுத்தியதாக தெரியவில்லை.

கடந்த 11.03 90 ஆந்திகதி ஞாயிறு வீரகேசரி வார மலரில், நாட்சம்பள அடிப்படையில் தமிழ் தட்டெழுத்தாளர்களையும், தமிழ் மொழி பெயர்ப்பாளர்களையும் நியமிப்பதற்கு அந்தந்த திணைக்கள தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக அரச கரும மொழிகள் ஆணையாளர் திரு. நிமால் சமரசுந்தர கூறியதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் அதே சமயம் கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுகளாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கச்சேரிகளிலும், ஏனைய அலுவலகங்களிலும் பல தட்டெழுத்தாளர்கள் அமைய அடிப்படையில் நியமனம் பெற்றுள்ளார்கள். ஆறுமாத காலத்திற்கு அமைய அடிப்படையில் வேலை செய்தவர்களை நிரந்தரமாக நியமிக்கும்படி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 41/88 திகதி 25- 11- 88 கூறிய போதிலும் இந்த அமைய தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு நிரந்தர நியமனம வழங்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்வரவில்லை. நிலைமை இவ்வாறிருக்க நாட்சம்பள அடிப்படையில் புதிதாக நியமிப்பதற்கு அரச கரும மொழிகள் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதே சமயம் தமிழ் தட்டெழுத்திலும், சுருக்கெழுத்திலு. மொழிபெயர்ப்பதிலும் தேர்ச்சி பெற்ற நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள். இவர்களுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தி நிரந்தரமான நியமனம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அதைவிடுத்து நாட்சம்பள அடிப்படையில் நியமனம் கொடுப்பது விரும்பத்தக்கதல்ல.

அரசாங்க மட்டத்தில் தமிழ் மொழியை அரச கரும மொழியாக அமுல் நடாத்துவற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்பதைப் பார்ப்போம்.

அ) பொது நிர்வாக அமைச்சின் தமிழ் மொழி அமுல்நடத்தல் பிரிவு என்பதனை ஏற்படுத்த வேண்டும் அத்துடன் மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மொழி அமுல் நடத்தல் கண்காணிப்பு உதவி ஆணையாளர் அவர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ தற் போதுள்ள அரச கரும மொழிகள் ஆணையாளர் பதவிக்கு இணையாக தமிழ் மொழி அமுல் நடத்தல் ஆணையாளர்ஒருவர் உடனடியாக நியமிக்கப்பட்டு அவருக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும். அவர் தமிழ் மொழி அமுலாக்கலுக்கு தேவையான தட்டெழுத்தாளர்களையும் சுருக்கெழுத்தாளர்களையும் நியமிப்பதற்கும் தேவையான தமிழ் தட்டெழுத்து கருவிகளையும் பெறுவதற்கு திறைசேரியிலிருந்து தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும்.

இ) இவை சாத்தியபபடாத விடத்தில் தமிழ் மொழியை அரசகரும மொழியாக அமுல் நடத்தும் பொறுப்பினை ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் தமிழ் அரச கரும மொழி என்பது நடைமுறைப்படுத்தாத ஒரு விடயமாக மாறி 'வெறும் ஏட்டுச்சுரைக்காய்' என்ற நிலை தான் ஏற்படும்.

வி. சரவணகுமார்
காரைநகர்.

---

மிக நீ ட நாட்களுக்கு பின்னர் நடை பெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பி.வி. தேவராஜ் அவ் விழாவின் சிறப்பாக நடை பெறுவதற்கும், தகுதியான ஆக்கங்களுக்கும் இடம் வழங்கப் பட வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு, உரிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பற்றவர்களை நடுவர்களாக நியமிக்குமாறுகூறியுள்ளதாகக்கேள்வி. இது ஒரு ஆரோக்கியமான நல்ல அம்சம் வழமையாக கொழும்பின்விழாக்களில் குறித்த சிலரேஆய்வாளர்களும், நடுவாளர்களாகவும் வருவதுகுறிப்பிடத் தக்கது.

நாற்பத்தைந்து ஐம்பது வயதிருக்கும். கறுத்த மேனி, கொஞ்சம் கனத்த சரீரம், கழுத்துகைகளில் நகைகள் ஏதுமில்லை. கையில் ஒரு பிளாஸ்டிக் வாளி. யாழ். நகர வீதி யொன்றில் நடந்து சென்று கொண்டிருந்தார். வீதியில் சென்று கொண்டிருந்த போது ஒரு வீட்டுவாசல் திறந்திருந்தது.

அந்த அம்மையார்சற்று நின்று எள்ளுப்பாகு வேண்டுமா என்று அமைதியாகக் கேட்டார்.

அம்மையார். வீட்டுவாசலில் நின்ற வீட்டுக் கார அம்மையார் உள்ளே வாருங்கா என்று அழைத்தார்.

உழுந்துமா தேங்காய்ப் பூ கலந்த எள்ளுப்பாகு ஒன்பது மூன்று ரூபாய், தனி எள்ளுப்பாகுநான்கு ரூபாய் என்று அந்த அம்மையார் கூறினார். எள்ளுப்பாகு இரண்டுமூன்று வாங்கப் பட்டன. விசாரணை தொடர்ந்தது. அந்த அம்மையாருக்கு எட்டுப் பிள்ளைகள். ஏழு பெண்கள். இரண்டு பெண்கள் மணமாகிவிட்டனர். கணவனுக்குச் சுகமில்லை. பாரிசவாதம். படுக்கை!

இப்படிய பல குடும்பங்களிருக்கலாம். எள்ளுப்பாகுசெய்துவல்வெட்டித்துறையிலிருந்து யாழ். நகர் வந்துகுடும்பத்தைக் காப்பாற்ற இந்தவயதில் அந்த அம்மையார் பாடுபடுகின்றார்.

இப்படியான குடும்பங்கள் வீட்டிலிருந்தேபணம் சம்பாதிக்கக் கூடிய குடிசைக் கைத்தொழில்கள் சிலவற்றைப் பொதுநிறுவனங்கள் ஆரம்பித்து வழிகாட்டக் கூடாதா?

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் பயிற்சி முகாம்கள்
# பாரதீய ஜனதா கட்சி குற்றச்சாட்டு;
# பொலிஸ் டைரக்டர் ஜெனரல் மறுப்பு!

(மதுரை)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கை குறித்து மத்திய புலனாய்வுத் துறையினர் விசாரிக்க வேண்டுமென்று பாரதிய ஜனதாக் கட்சி துணைத் தலைவர் கிருஸ்ண மூர்த்திமத்திய அரசாங்கத்தை கோரியுள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தவறிவிட்டதென்றும் இதனால் இதனை மத்திய புலனாய்வுத் துறையினர் விசாரிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ்நாட்டில் சென்னைக்கு அண்மையிலும், வேதாரணியத்திற்கு அருகேயுள்ள உதுமலைப்பேட்டையில் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் இருப்பதாகவும், அதில் தமிழ் நாட்டு இளைஞர்கள் பயிற்சி பெறுவதாகவும் அதனைத் தமிழ் நாட்டு அரசு பாராமுகமாக இருப்பதாகவும் கிருஷ்ண மூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுசம்பந்தமாக தமிழக அரசு ஓர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் அறிந்தவரை தமிழகத்தின் எப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இல்லை எனதமிழ்நாட்டு மாநில பொலிஸ் டைரக்ரர் ஜெனரல் துரை தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தென்காசி அருகோரம், வேதாரணியம் உதுமலைப் பேட்டையிலும் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்களில் நாட்டு இளைஞர்கள் பயிற்ச்சி பெறுவது பற்றி கிருஷ்ணமூர்த்தியின் குற்றச்சாட்டுப் பற்றி பத்திரிகையாளர் கேட்ட போதே துரை இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் கிருஷ்ண மூர்த்தியின் செய்தி பத்திரிகையில் வெளிவந்து, நான் பார்த்ததும் கிருஷ்ண மூர்த்தியுடன் போனில் தொடர்பு கொண்டபோது முகாம்கள் பற்றி தகவல் எதையும் அவர்தரவில்லைஎன்றும்தெரிவித்தார். ஆணால் 16 ஆம் திகதி தான் சென்னை வரும் போது நேரில் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார் எனவும் டைரக்ரர் ஜெனரல் துரை தெரிவித்தார்.

அதே வேளை கிருஷ்ண மூர்த்தி தகுந்த தகவல் தரும் பட்சத்தில் அதன் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## இளைஞர்கள் சுயதொழில் பெற சர்வோதயம் நடவடிக்கை

(கிளிநொச்சி)

படித்து விட்டு வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு கடன் வழங்கி சுயதொழில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் கிளிநொச்சி மாவட்ட சர்வோதய இயக்கம் ஈடுபட்டு வருகிறது.

18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட, படித்து விட்டு வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கு முகமாக சர்வோதய இயக்க கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திரு. பரமநாதன் தில்லைநாதன் பத்துக்கு மேற்பட்ட வேலைத் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆடு, மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், நெற்பயிர் செய்தல், உப உணவுப் பயிர் செய்தல், சிறுகைத் தொழில் செய்தல் போன்ற வேலைகளில் இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தும் நோக்கமாகவே திட்டங்களை வகுத்து வருகிறார்.

ஒரு வேலைத் திட்டத்திற்கு 20 இளைஞர் யுவதிகளை சர்வோதயத்தில் சேர்த்து கூட்டுறவு முறையில் வேலைத் திட்டங்களைச் செய்யவுள்ளார். பல வேலைத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் பல நூற்றுக் கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

இதற்கு வேண்டிய நிதி உதவியை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் வழங்க இருக்கிறார். அவரிடமிருந்து பெறப்படும் நிதியிலிருந்து சர்வோதயம் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளுக்கு சுய வேலைவாய்ப்பை வழங்கவிருக்கிறது.

சர்வோதய வட பிரதேச வெளிக்கள இயக்குநர் திரு. சுப்பிரமணியத்தின் பணிப்பின் பேரில் வட பகுதியிலுள்ள சகல சர்வோதய இயக்கங்களும் இம் மாதிரியான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

இத் திட்டத்தை திறம்படச் செய்யும் வட பகுதி சர்வோதய இயக்கத்திற்கு அவர் விசேட உதவிகளை வழங்க திரு. சுப்பிரமணியம் திட்டமிட்டுள்ளார். (49)

## மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களுக்குத் தொழில்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலும், சிங்கப்பூரிலும் இலங்கையர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் தரப்பட்டுள்ளன.

தச்சுவேலை, மேசன் வேலை, சாதாரண கனரக வாகனம் ஓட்டிகள், பணிப் பெண்கள், குழந்தை பராமரிப்பு போன்ற தொழில்களே இலங்கையர்களுக்குத் தரப்பட்டுள்ள தொழில் வெற்றிடங்களாகும். சிங்கப்பூரில் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு முன்னிரிமை வழங்கப் படுமாம்.

சென்ற வாரத்தில் மாத்திரம் முகவர் நிலையங்கள் மூலமாக சிங்கப்பூரும், மத்திய கிழக்கு நாடுகள் 3,622 இலங்கையர்களுக்குத் தொழில் வழங்கியுள்ளன.

## மூன்று பிள்ளைகள் 8நாட்கள் இடைவெளியில் பிறந்தன

(ரிதியா)

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பெண் (22 வயசு) ஒருவர் எட்டு நாட்கள் இடைவெளியில் மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ளார். இது மகப்பேற்று வரலாற்றில் நடந்தறியாத சம்பவம் என்று சவூதி மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

முதல் ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்த இவர், எட்டு நாட்களுக்குப் பிறகு ஆண்குழந்தைகளான இரட்டையரைப் பெற்றெடுத்ததாக ஜெடா மகப்பேற்று நிபுணர் மைக்கேல் ஜேர்ஜி தெரிவித்தார்.

மலட்டுத்தன்மையைப் போக்குவதற்காக இப் பெண் வைத்தியம் செய்து வந்தார் என்பதைத் தவிர இந்த மகப்பேற்றுக்கான வேறு விஞ்ஞானபூர்வமான விளக்கங்களைத் தரமுடியாது என்று மைக்கேல் தெரிவித்தார்.

## சோவியத் யூனியனுக்கு

## புதிய வைத்தியசாலை அமைக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

ஆயிரத்து இருநூறு கட்டில்கள் கொண்ட புதிய வைத்தியசாலை ஒன்றை திருநெல்வேலியில் அமைப்பது பம்பந்தமாக யாழ். சல்கலைக்கழக மருத்துவ பீடமும் யாழ். போதனா வைத்தியசாலையும் ஓர் இணக்கத்திற்கு வந்துள்ளன.

இவ் வைத்தியசாலைபற்றிய மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக சுகாதார அமைச்சுக்கு இவ் வைத்தியசாலையின் அமையம் அமைப்பு அடங்க வேண்டிய மருத்துவ பகுதிகள் என்பன பற்றிய விபரம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது என யாழ். வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (லோ)

### கற்குடாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொகையான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இறந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 16 பேர் மரணமடைந்துள்ளனர். பொது மக்களில் நாற்பது பேர் அளவில் இறந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிகின்றது.

திடீர் தாக்குதலின்போது கல்முனையில் தர்மலிங்கம் கோபி (07), காந்தி ரேவதி (19) மகாதேவன் சந்திரன் (10) எஸ். ஜோச்ஜ் வி. மைக்கல் ஆகியோர் மரணமடைந்தவர்களில் சிலராகும்.

### விடுதலையான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நகரில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் பல முடிச்சுமாறிகளையும், திருடர்களையும், பிடித்துள்ளனர். விசாரணைகளின் போது இவர்கள் பகிரங்க

## வலி தாங்காமல் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கில் நேற்று ஒருவர் நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டார். தோட்டவேலை செய்யும் பூதன் நாகமுத்து (வயது 47) என்னும் நபருக்கு காலில் திடீர் விபத்தினால் ஏற்பட்ட காயம் ஒன்று பல நாட்களாக மாறாமல் வலி ஏற்படுத்தி வந்துள்ளது. இவ்வலியை தாங்க முடியாத இவர் தனது தோட்டத்திற்காக வாங்கி வைத்திருந்த தமரோன் என்னும் நஞ்சையருந்தித் தற்கொலை செய்து கொண்டார்

### மட்டக்களப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்று ஊர் ஜிதமற்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு இதுபற்றிய நிலைமைகளை

### கண்டெடுக்கப்பட்டது

பாக்கியமுத்து சிவநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், நாட்குறிப்பேடும், பணமும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அவற்றை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### டெங்குக் காய்ச்சல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பும் நுளம்புகள் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் அதிகமாக காணப்படுகின்றன.

இந்த நோயைக் கட்டுப்படுத்தவும் நுளம்புகளை ஒழிக்கவும் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்துவருகிறது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்த நோய் ஒருவரால் மற்றொருவருக்கு பரவும் ஆபத்து இன்னமும் ஏற்படவில்லை என்று சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ தெரி

## வற்றாப்பளையால் வந்தவரை யானை தாக்கியது

(யாழ்ப்பாணம்)

வற்றாப் பளை அம்மன் கோவில் தரிசனம் முடித்து விட்டு சைக்கிளில் வீடுதிரும்பிய ஒருவர் ஒரு யானையினால் சைக்கிலுடன் தூக்கியெறியப் பட்டு பலமாகத் தாக்கப் பட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த கந்தையா செல்வராசா என்பவர் வற்றாப்பளை அம்மன் பொங்கல் விழாவிற்கு சென்று வீட்டு அதிகாலை இரண்டுமணியளவில் நண்பர்களுடன் சைக்கிலில் போட்டிக்கு ஓடிவந்தனர் எனவே நண்பர்களை விட சிறிது தூரம் முன்னே வேகமாகச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது திடீரெனஇவரது அலறல் சத்தத்தைக் கேட்ட நண்பர்கள் திரும்பி ஓடிவிட்டனர். பின்வந்து பார்த்த போது சிலயானைகள் சென்று கொண்டிருப்பதையும், இவர் மயக்க முற்றுக்கிடப்பதையும் கண்டனர்.

இச் சம்பவம் மாங்குளத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் கண்டிவீதியிலேயே நிகழ்ந்துள்ளது, இவர் மயங்கிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்(மு)

## அரசகருமமொழிச்சட்டத்தை அமுலாக்க ஆணைக்குழு

(கொழும்பு)

அரச கரும மொழிச்சட்டத்தை அமுலாக்க அரச கரும மொழி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இவ் ஆணைக்குழு அரச கருமமொழி அமுலாவதை கண்காணிக்கும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

அத்துடன் இச் சட்டத்தை மீறுவோருக்கு 3மாத கடூழிய

### பெஸ்டஸ் பெரேரா

இலங்கையின் நிலைமைக்கு அமைய மொழிப் பயிற்சி நெறித்திட்டம் ஒன்றை அமைச்சுஆரம்பித்திருப்பதுமொழிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க ஊழியர்கள் இலங்கையில் பேசும் மூன்று மொழிகளின் அறிவைப் பெற்றுக் கொள்வது அவசியம் எனக் கருதப்பட்டதால் இப் பயிற்சி

பெண்கள், குழந்தை பராமரிப்பு போன்ற தொழில்களே இலங்கையர்களுக்குத் தரப் கிழக்கு நாடுகள் 3,622 இலங்கையர்களுக்குத் தொழில் வழங்கியுள்ளன.

# மூன்று பிள்ளைகள் 8நாட்கள் இடைவெளியில் பிறந்தன

(ரிதியா)

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பெண் (22 வயசு) ஒருவர் எட்டு நாட்கள் இடைவெளியில் மூன்று குழந்தைகளைப் பெற்றுள்ளார். இது மகப்பேற்று வரலாற்றில் நடந்தறியாத சம்பவம் என்று சவூதி மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதல் ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்த இவர், எட்டு நாட்களுக்குப் பிறகு ஆண்குழந்தைகளான இரட்டையரைப் பெற்றெடுத்ததாக ஜெடா மகப்பேற்று நிபுணர் மைக்கேல் ஜேர்ஜி தெரிவித்தார்.

மலட்டுத்தன்மையைப் போக்குவதற்காக இப் பெண் வைத்தியம் செய்து வந்தார் என்பதைத் தவிர இந்த மகப்பேற்றுக்கான வேறு விஞ்ஞானபூர்வமான விளக்கங்களைத் தரமுடியாது என்று மைக்கேல் தெரிவித்தார்.

# சோவியத் யூனியனுக்கு ஈரான் இயற்கை வாயு ஏற்றுமதி

(தெஹ்ரான்)

ஈரான் வருடாந்தம் 350 கோடி கியூபிக் மீட்டர் இயற்கை வாயுவையும், தினமும் 80 லட்சம் கியூபிக் மீட்டர் வாயுவையும் சோவியத் யூனியனுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது.

1979 இஸ்லாமியப் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் யூனியனுக்கான ஈரானின் வாயு ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. விலை விவகாரமே இதற்குக் காரணம். எப்படியிருப்பினும் சர்வதேச விலை மட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

# பீரங்கிக் குண்டுகள் பீகாரில் களவு

(டில்லி)

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் விஷேட புகையிரதம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட கனரகப் பீரங்கிக் குண்டுகள் புகையிரதத்திலிருந்து களவாடப்பட்டுள்ளதாக பி.ரி.ஐ. செய்திஸ்தாபனம் ஞாயிறன்று அறிவித்துள்ளது.

பிரச்சினைக்குரிய வட இந்திய மாநிலமான பஞ்சாப்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட குண்டுகள் வெள்ளியன்று பீகார் மாநிலம் வழியாக புகையிரதத்தில் எடுத்துச் செல்லப்படும்போது, இரண்டு புகையிரதச் சரக்குப் பெட்டிகள் உடைக்கப்பட்டுக் குண்டுகள் களவாடப்பட்டுள்ளன.

105 மில்லி. மீற்றர் தாங்கிகளில் உபயோகிக்கப்படும் பீரங்கிக் குண்டுகளே களவாடப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. காணாமற்போன குண்டுகளின் எண்ணிக்கை தெரியவில்லை என்றாலும் காணாமற் போன குண்டுகளின் எண்ணிக்கை அதிகமாம்.

# வான் குடை சாய்ந்து பயணிகள் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

பக்தர்களுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினிவான் சரிந்ததில் பலர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

வற்றாப்பளை அம்மன் கோவில் திருவிழாவிற்குச் சென்ற பக்தர்கள் நேற்று யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது கிளிநொச்சி புத்துவெட்டுவான் என்றவிடத்தில் சரிந்து விட்டது. இதனால் வானில் இருந்தவர்களும் படுகாயத்திற்குள்ளானார்கள். இவர்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். சிலர் அங்கிருந்து யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலைக்குத் தாமாகவே வேறு பஸ்ஸில் வந்து சேர்ந்தார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 16 பேர் மரணமடைந்துள்ளனர். பொது மக்களில் நாற்பது பேர் அளவில் இறந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிகின்றது.

திடீர் தாக்குதலின்போது கல்முனையில் தர்மலிங்கம் கோபி (07), காந்தி ரேவதி (19) மகாதேவன் சந்திரன் (10) எஸ். ஜோச்ஜ் வி. மைக்கல் ஆகியோர் மரணமடைந்தவர்களில் சிலராகும்.

## விடுதலையான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நகரில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸார் பல முடிச்சுமாறிகளையும், திருடர்களையும், பிடித்துள்ளனர். விசாரணைகளின் போது, இவர்கள் பகிரங்க மன்னிப்பின் பேரில் விடுதலையாகிய மாஜிக் கைதிகள் எனத் தெரியவந்துள்ளது.

## மண்டபத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோர ரோந்துப் படகுகளும் இருக்கும் அதேவேளை முன்னர் இவ்வாறொரு கடற்படைப் பிரிவு இராமேஸ்வரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து பின்னர் மத்திய அரசால் வாபஸ் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க தமிழ் நாட்டில் சட்டமும் ஒழுங்கையும் பராமரிக்க மத்திய பொலிஸ்படையோ இராணுவமோ தேவையில்லை எனவும், தமிழ்நாட்டுப் பொலிசாரே அதை நிலைநாட்ட போதுமானவர்கள் என மத்திய அரசிற்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசுக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்குல காணித்துண்டுக்கும் அரசாங்கமே பொறுப்பாக உள்ளது. இக்கட்டத்தில் அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுக்கவுள்ளது பற்றி பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

## யுத்த நிறுத்தம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படாவிட்டால் யுத்தம்பல இடங்களுக்குப் பரவலாம் என்று எதிர் பார்க்கப் படுகிறது. போர் மேலும் பரவாமல் தடுப்பதற்கு யுத்த நிறுத்தத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்கும் நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா சிங்களப் பொலிசார் அத்துமீறல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது தெரிந்ததே.

புத்தூர் கிழக்கில் நேற்று ஒருவர் நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டார். தோட்டவேலை செய்யும் பூதன் நாகமுத்து (வயது 47) என்னும் நபருக்கு காலில் திடீர் விபத்தினால் ஏற்பட்ட காயம் ஒன்று பல நாட்களாக மாறாமல் வலி ஏற்படுத்தி வந்துள்ளது. இவ்வலியை தாங்க முடியாத இவர் தனது தோட்டத்திற்காக வாங்கி வைத்திருந்த தமரோன் என்னும் நஞ்சை யருந்தித் தற்கொலை செய்து கொண்டார்

## மட்டக்களப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்று ஊர்ஜிதமற்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு இதுபற்றிய நிலைமைகளை ஆராய்ந்து பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

பெருமாள் என்ன செய்தாரோ அதனையே பிரபாகரனும் செய்துள்ளார். இதில் பெருமாளுக்கு நேர்ந்த கதி தான் பிரபாகரனுக்கும் ஏற்படும்.

இந்த நாட்டிலுள்ள சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிம்களோ ஆயுத பலத்தால் நாட்டின் எந்த ஒரு பகுதியையும் சட்டவிரோதமாக சர்வாதிகாரத்தை ஏற்படுத்த அனுமதிக்கபடமாட்டாது.

இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டால் அதனை நாம் எதிர் கொள்வோம். இது ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. அனைவரது ஒத்துழைப்பும் இதற்குத் தேவை. இந்த நிலைக்கு எதிராக அனைவரும் திரளவேண்டும்.

சகல சமுகங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்களும் வாழ்கின்றனர். இது தமிழர்களுக்கு எதிரான ஒரு யுத்தம் அல்ல. குற்றவாளிகளுக்கு எதிரான போராட்டமே இது. ஜே.வி.பி இயக்கத்தையும் போன்ற குற்றவாளிகள் வடக்கு கிழக்கு பகுதிகளில் தம்மிடம் ஆயுத பலம் இருப்பதாக நினைத்துக் கொண்டு அடாவடித்தனத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்,

அப்பகுதியிலுள்ள மக்களை அடக்கி இந்த அரசாங்கத்தின் பொறுப்பை தாம்வைத்துக் கொள்ளலாம் என எண்ணுகிறவர்கள் அது இலகுவான காரியமுமல்ல அவர்களுக்கு இது விளையாட்டாக இருக்கப் போவதில்லை குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தண்டிக்கப்படும் வரை தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

படும், பணமும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அவற்றை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## டெங்குக் காய்ச்சல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பும் நுளம்புகள் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் அதிகமாக காணப்படுகின்றன.

இந்த நோயைக் கட்டுப்படுத்தவும் நுளம்புகளை ஒழிக்கவும் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்துவருகிறது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

இந்த நோய் ஒருவரால் மற்றொருவருக்கு பரவும் ஆபத்து இன்னமும் ஏற்படவில்லை என்று சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ஜோ. பெர்னாண்டோ தெரிவித்தார்.

நுளம்புகள் காணப்படும் இடங்களை அழித்துவிட பொதுமக்களும் நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்காவிட்டால் குற்றம் செய்பவர்களை தண்டிக்க சட்ட மூலம் கொண்டுவரப்படும் எனவும் டாக்டர் பெர்னாண்டோ கூறினார்.

## பள்ளிக்கூடங்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படும். ஆனால், மா உணவுக்குப் பிள்ளைகள் பழக்கப்பட்டிருப்பதாலும், பெற்றோர் மாற்று உணவுப் பண்டங்களைத் தேடுவதில் சிரமமுள்ளதாயும் ஆரம்பத்தில் அதிபர்கள் கண்டிப்பாக இருக்கக் கூடாது என்றார்.

## ஹமீத் புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியம்(பேபி) யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அரசியல் பொறுப்பாளர் செல்வி மாலினி திருமதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

யுத்தநிறுத்தம் இன்று புதன் கிழமை நண்பகலுக்குள் ஏற்படின் அமைச்சர் ஹமீத்தும்விடுதலைப்புலிகள்குழு ஒன்றும் நாளை மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குநடைபெற்ற மோதல் நிலமைபற்றி விடுதலைப் புலிகளின் இராணுவ அரசியல் பொறுப்பாளர்களுடனும் சிங்கள இராணுவ பொலிஸ் அதிகாரிகளுடனும் கலந்துரையாடுவர் என தீர்மானிக்கப்பட்டது எனநேற்று நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்டன்பாலசிங்கம்தெரிவித்தார். மேலும் காலை 10 மணியிலிருந்து மதியம் ஒருமணிவரை பேச்சுகள் நீடித்ததாகவும் அவர் தெரிவித்தார். (அ)

சென்று வீட்டு அதிகாலை இரண்டுமணியளவில் நண்பர்களுடன் சைக்கிலில் போட்டிக்கு ஓடிவந்தனர் எனவே நண்பர்களை விட சிறிது தூரத்தில் கண்டிவீதியிலேயே நிகழ்ந்துள்ளது, இவர் மயங்கிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்(மு)

# அரசகருமமொழிச்சட்டத்தை அமுலாக்க ஆணைக்குழு

(கொழும்பு)

அரச கரும மொழிச்சட்டத்தை அமுலாக்க அரச கரும மொழி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இவ் ஆணைக்குழு அரச கருமமொழி அமுலாவதை கண்காணிக்கும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

அத்துடன் இச் சட்டத்தை மீறுவோருக்கு 3மாத கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெஸ்டஸ் பெரேரா

இலங்கையின் நிலைமைக்கு அமைய மொழிப் பயிற்சி நெறித்திட்டம் ஒன்றை அமைச்சு ஆரம்பித்திருப்பதுமொழிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க ஊழியர்கள் இலங்கையில் பேசும் மூன்று மொழிகளின் அறிவைப் பெற்றுக் கொள்வது அவசியம் எனக் கருதப்பட்டதால் இப் பயிற்சி வகுப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது எனவும் அமைச்சர் சொன்னார்.

## சீருடைகள் வழங்கப்படவில்லை

(வடமராட்சி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவில்லையாம்.

1989 - 1990 ஆண்டுக்கான சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லையாம். மேற்படி உடைகள் வருடா வருடம் சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (68)

## பல்கலைக் கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரி திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பெரும் பிரச்சினைக்குரியதாகப் பல வருடங்களாக இழுபறியாக இருந்து வந்த இக்காணி விடயம் சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது. இது விடயம் சம்பந்தமாக படித்த மக்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரையும், விடுதலைப் புலிகளையும் பாராட்டினர். (49)

## தபால் ரயில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் புறப்பட்டுச் சென்றன. கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களுக்கான இலங்கை போக்குவரத்துச் சேவைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை காலையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் பஸ் வண்டிகள் புறப்பட்டுச் செல்வதற்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தனியார் பஸ் சேவையினர் தெரிவித்தனர்.

## கொண்டா சாளி மோதல்

(விசேடநிருபர்)

கொண்டா,சாளி மோதலில் சகோதரன்சகோதரிஇருவரும் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை 7 மணியளவில் யாழ். கே.கே எஸ். வீதி, சிவப்பிரகாசம் வீதிச், சந்தியில் இச் சம்பவம் நடைபெற்றது.

கே.கே.எஸ்.வீதியில்கொண்டாச்சைக்கிளில் வந்து கொண்டிருந்த மேற்படி சகோதரனையும் சகோதரியையும் சிவப்பிரகாசம் வீதியால் வந்த பெண்மணி ஒருவரின் சாளி மோதியது.

இணுவிலைச் சேர்ந்த வயிரவப்பிள்ளை கனகசபாபதி (வயது 31) வ. ஜெகதீஸ்வரி (வயது 18) ஆகிய இருவருமே காயத்துக்குள்ளானவர்களாவர். (21)

## வெங்காயச் செய்கை குறைவடைந்துள்ளது

(அராலி)

அராலி வட்டுக்கோட்டைப் பகுதிகளில் பம்பாய் வெங்காயச்செய்கை இம்முறை குறைவடைந்துள்ளது.

செய்கைக்கென தயார் படுத்தப்பட்ட வெங்காய நாற்றுக்கள் தென்பகுதி வியாபாரிகளால் கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் செல்லப்பட்டமையே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.

இவ்வருடம் நாட்டில் ஓரளவு அமைதிநிலை காணப்படுவதால் தென்பகுதிச் சிங்கள வியாபாரிகள் இப்பகுதியில் வெங்காய விதைகள், நாற்றுக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.(20)